www.tamilarangam.net

1996 Jan-Feb. SARVADESA TAMILER VOL.3 NR.1



# சர்வதேசத்தமிழர்

மிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை!

rway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & Solidarity!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள்/நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22 166733;ரு.பாலதாஸ் 22 206327பேர்கன்:என்.ஜெயதரன்.ஐ.றோயலா தூரொண்கைம்:த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா; வார்டோ:

## வாசகர் கடிதம்.

**அன்புள்ள ஆசிரியருக்கு,**
சர்வதேசதமிழர் ஏட்டினைப் பேராதனைப் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் பார்வையிட்டேன்.மிக வும் அத்தியாவசியமாகத்தேவைப்படும் ஒருநற்பணியினைத் தாங்கள் புரிகின்றீர்கள்.எமது மனமார்ந்த பாராட்டுகளும்,வாழ்த்துக்களும்! இலங்கைப் பெருந்தோட்டங்களில் வாழும் இந்தியவம்சாவழித்தமிழர் பற்றிய எனது கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக எழுதிப்பிரசுரித்த -மலையகமக்களின் சமயநம்பிக்கைகளும் சடங்குமுறைகளும்-எனும் நூலை இத்துடன் அன்பளிப்பாக அனுப்புவதில் மகிழ்வடைகிறேன். இந்த ஆய்வுஅனுபவங்களை அடியொற்றி,நோர்வே,மற்றும் வேறு பல நாடுகளில் வாழும் தமிழர்பற்றி விரிவானஆய்வொன்றை மேற்கொள்ள விருப்பமுண்டு.தமிழர் அமைப்புகள்,ஆர்வமுள்ளோருடன் உடன் தொடர்புகொள்ள விரும்புகிறேன். தங்கள் முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன். என்றும் மங்களம் உண்டாகுக!

**<u>டாக்டர்.ந.வேல்முருகு,</u>**
**புவியியல் துறை,பேராதனைப் பல்கலைக்கழகம்,இலங்கை.**
(நோர்வேஆய்வுக்கவுன்சில் முகவரி அனுப்பப்படுகிறது.உலகத்தமிழர்அமைப்புகளும் உதவுக! ஆ-ர்)

**பெருந்தகைமீர்!**
வணக்கம்!சர்வதேச தமிழர் ஏடுகள் கிடைக்கப்பெற்றமைக்கு மிகமிக நன்றி பாராட்டுகிறோம்.தமிழியம் ஏடு தங்களுக்கு அனுப்பப்படுகிறது தங்கள் கனிவானஅன்பையும், அரும்பாடுபட்டுவரும் வினையாற்றலையும் பாராட்டுகிறோம்.நன்றிகள் பல! உலகத்தமிழ் பண்பாட்டியக்கம் தோன்றி 22ஆண்டுகள் ஆகின்றன. 1977முதல் 30நாடுகளில் கிளை அமைத்து நேர்முகப்பயணம் செய்து,பெருஞ்செலவில் இவ்வியக்கத்தைப் பரப்பினோம்.ஏடுகள் வெளியிட்டோம்.உலகளாவிய 5 மாநாடுகளை நடாத்தியுள்ளோம்.1996 ஆகஸ்டில் எமது 6வது உலகமாநாடு கனடாவின் ரொறன்ரோவில் நடாத்த அந்நாட்டுக்கிளை முனைந்து செயற்படுகிறது.அதற்கு சர்வதேச தமிழரின் பேராதரவு தேவை! அனைவரும் அறிய உதவுக!! பலநாடுகளில் வாழும் உலகத்தமிழரை இணைக்கும் இத்தகையவாய்ப்பு இன்று புலம்பெயர்ந்தவர்களால் நவீன அறிவியற்கருவிகளால் சிறப்படைந்துள்ளது.இது யாம்பெற்ற பெரும்பேறு!சர்வதேச தமிழர் ஏடு உலகமெல்லாம் பரவட்டும்!வாழ்க!!

**<u>பேராசிரியர் இர.ந.வீரப்பன்</u>**
Intl Movement for Tamil Culture,
110,Jl Bangau,Berkley,41150,Klang H.Q.,Malaysia.
Tel.03.3417906 Fax.03.3428280
(உ.த.ப.இயக்கத்துடன் சர்வதேச தமிழர் நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு மேற்கொள்ளும்.மாநாட்டு வெற்றிக்கும் சகலரும் பாடுபடுக!ஆ-ர்)

**அன்புள்ள ஆசிரியருக்கு!**
சர்வதேசதமிழர் எனும் பெயருக்கேற்ப அகிலஉலக தமிழர் செய்திகளை வெளிக்கொணர்ந்து நற்பணி புரிகிறீர்கள்.நன்றி!
தென்கிழக்காசியபயண அனுபவங்கள் தொடரில் தாங்கள் மலேசியா பற்றி எழுதி இருந்த பகுதியை தங்கள் சஞ்சிகைக்கு நன்றி கூறி இதயம் இதழில் மீள்பிரசுரம் செய்திருந்தோம்.சர்வதேச தமிழர் சிறக்க இலக்கியவாதிகள் பேட்டி,மற்றும் கவிதைகள் அனுப்பி உதவுவோம்! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே,முன்தோன்றி மூத்த தமிழ்!என சிறப்பு பேசிய நாம்,இன்று உலகத்தவரால் அகதி! என்றே இனங்காணுமளவிற்கு நமது தாயகப்போராட்ட நிகழ்வுகள் நம்மை நெருக்கித் தள்ளியிருக்கிறது. ஈழத்தில் புறநானூற்று வீரம் மீண்டும் தோன்றியிருக்க,தரணி எங்கும் தமிழர் அகதிகளாய்.....அலையலையாய்! சர்வதேசமெங்கும் சிதறிஇருக்கும் எல்லாத்தமிழருக்கும்,ஒரு இணைப்புப்பாலமாய் சர்வதேசதமிழர் திகழ என்றும் என் வாழ்த்துக்கள்!

**<u>கணபதி கணேசன்-மலேசியா</u>**
26-28,Jalan 2-2A,Taman Selasajaya
43300 Balakong,Selangor.DE.Malasia

**அன்பு ஆசிரியநண்ப!**
எதிர்வரும் இளவேனில் காலத்தில் சர்வதேசதமிழருக்கு இலண்டனில் கௌரவவிழா ஒன்றை ஏற்பாடுசெய்ய எண்ணியுள்ளோம்.அதற்காக சர்வதேசதமிழர் சிறப்புமலர் லண்டனிலிருந்து வெளியிடவிரும்புகிறோம். அவ்விழாவுக்கு வேண்டிய சகல ஒழுங்குகளும் செய்து கௌரவிக்க ஒரு தயாள சிந்தையுள்ள தமிழர் முன்வந்துள்ளார்.இவர் ஈழத்து வன்னியை பிறப்பிடமாகவும்,1975ல் பேராதனைப்பல்கலைக்கழக தமிழ்ச் சங்கச்செயலாளராயும் விளங்கிய திரு.பரமலிங்கம் ஆவர்! வாழ்க!வளர்க!! சர்வதேசதமிழர்!

**<u>டாக்டர்.செ.ஆனந்தவரதன்,</u>**
18,Hide Rd,Harrow,Middlesex
HA14SF,EnglandTel/Fx.181.4270839
(சிறப்புமலருக்காக உலகத்தமிழர்கள் பேட்டிகள்,கட்டுரைகள்,கவிதைகள்,சிறுகதைகள்,விளம்பரங்களை மேலுள்ள முகவரிக்கோ, நோர்வே முகவரிக்கோ அனுப்பலாம்.ஆ-ர்)

**அன்பின் ஆசிரியருக்கு,**
சர்வதேசதமிழர் இதழ் கண்டு மன மகிழ்ந்தேன்.என்னை இணைப்பாளராக இணைத்தமைக்கும் நன்றிகள் புதுவருடத்திற்காய் அழகாக புகுந்திருந்த அத்தனை அம்சங்களும் பிரமாதம்!என்பெயர் தமிழ்க்குழந்தை!என்ற கவிதையை தமிழில் எழுதியிருக்கலாம்.நாம்கற்ற மொழிகளிலே தமிழைப்போன்ற இலக்கிய அழகு, வேறுமொழிகளில் இல்லை!

**<u>ஏ.யு.எல்.ஏ.ஹில்மி,தெ.கொரியா</u>**

**அன்பார்ந்த ஆசிரியர்க்கு,**
சர்வதேசதமிழர் கிடைப்பதையிட்டு நன்றிகள்!சர்வதேசதமிழர் வாசகர்க்கு என் பொங்கல்வாழ்த்துக்கள்!! தொடர்பை பேணிக்கொள்வோம்!

**<u>தமிழக திரைக்கலைஞர்,</u>**
**<u>பிரசாந்த் தியாகராஜன்.</u>**

**அன்பார்ந்த ஐயா,**
தமிழகமீனவர்கள் சவுதிஅரேபியாவில் படும் கஷ்டங்கள் பற்றிய தங்கள் ஃபக்ஸ் கிடைத்தது.
சர்வதேச தொழில்தாபன பிரதிநிதித்துவ நடைமுறைகள்,முறையீடுகள் பற்றிய விபரங்களை நாம் தொழிலாளர் சங்கங்கள், தொழில்தருவோர் அமைப்புகள், அரசுகள், சர்வதேசதொழிலாளர் வருடாந்தமாநாட்டு பிரதிநிதிகட்கும் வழங்கமுடியும் என்பதை அறியத்தருகிறோம். தங்கள் விசுவாசமான,

<u>Lee Swepston</u>,Chief-Equality and Human Rights Coordination Branch
International Labour Office,(I.L.O.)
4,route des Morrillons,CH.1211,
Geneva 22,Switzerland
Tel.22.7996111Fax.22.7988685
(தொழிலாளர்கள் அமைப்புகளாக தம்மை ஒழுங்குபடுத்தியபின்,தொடர்புகொள்க.ஆ.ர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தியாகலிங்கம்:போலவோக:இரா.விஜய:போட்ஸ்பியுட:க.சுரேஷ்கரன் கின்சார்விக்:பா.பாலேந்திரன்:பிறத்வோக்:எஸ்.தங்கராஜா
பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன் 181.4270839;ந.பாலமுரளி 181.4729336;திருமதி.த.மனோகரன் 181.4713060;மு.ஆறுமுகம் 181.5432126
கிருஷ்ணா வைகுந்தவாசன் 181.542 9787 செ.நாகேந்திரன் 181.5532190 கனடா:பா.சிவலிங்கம் 416.4497607;இ.வளர்மதி:
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.2351723161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்



## ஆசிரியர் கருத்து:

### தமிழர்களும் எதிரிகளும்!

தமிழர்கட்கு யார் எதிரிகள்? என வினாவினால் பெரும்பாலும் தமிழர்கட்கு, தமிழர்களே எதிரிகள்! என பலர் விடையளிப்பர்.வேற்றுஇனங்களால் வரும்ஆபத்தைவிட தமிழரால் தமிழருக்கு வரும் ஆபத்துகள் நிறையவே உள்ளன.

தமிழ்நாட்டில் ஒருவரில் ஒருவர் காழ்ப்புணர்ச்சி அரசியலால்,எதுவும் செய்யத்துணியும் நிலையைக்காண்கிறோம்.அரசியல் கொலைகள், காடைக்குழுக்களால் வன்முறைத்தாக்குதல்,பெண்அரசியல்வாதிக்கே அசிட் வீசுதல்,ஆட்கடத்தல்,மக்கள் நலன்பேணுவதை விடுத்து தமது பணப்பையை நிரப்புவதிலும்,சொத்து சேர்ப்பதிலும் வெளிப்படையாகவே இயங்கல்,தமிழனை வரவிடாது பிறமாநிலத்தவரை முதல்வராக்கத்துடித்தல்,மத்தியஅரசுக்கு தமிழ் தமிழர் நலம்பேணாது வால்பிடித்தல் போன்றவை சுட்டிக்காட்டப்பட வேண்டியவை.

பணம்படைத்தோர் இன்னும்,வேண்டும்!வேண்டும்!எனும் பேராசையும், ஏழைகட்கும்,நல்லவிடயங்கட்கும் உதவாத கஞ்சத்தனமும் நிரம்பியவர்களாகவும்,எந்த சட்டவிரோத முறையையும்பாவித்து பணம்தேட அச்சமற்றவர்களாயும் இருப்பது உலகம் எங்கே போகிறது?என்பதைக்காட்டுகிறது.சட்டவிரோதமுறைகளால் செல்வம்தேடும் வழிமுறைகட்கு ஆபத்துவரின் உலுத்தர்கள் எதுவும் செய்ய முனைவதும் இன்று கண்கூடு!அதிகாரத்தை கையில் எடுப்போரும் அதனை தம் வாழ்நாள் முழுவதும் வைத்துக் கொள்ள விரும்புவதையே காண்கிறோம்.

பணம்,அதிகாரம்,அடக்குமுறை, பேராசை,கோபம்,வெறுப்பு,பொறாமை இறுதியில் வெல்லாது!

நல்லமனம்,பொதுமென்றமனம்,அறிவுடைமை,அன்புடைமை,ஒழுக்கம் என்பனவே ஈற்றில் வெல்லும்.

அகவாழ்வில் அன்புக்கும், புறவாழ்வில் அறிவுக்கும் முதலிடம் தராத எந்தமனிதகுழுவின் வாழ்வும்,வெற்றியடைந்ததாக சரித்திரம் இல்லை!

## சிந்தனைத்தடாகம் –Think Tank

மேற்குநாடுகள் தமது அறிவு,அனுபவங்களினால் மக்களுக்கு எது வசதியோ,அதனை செய்து மக்கள் பிரச்சனையின்றி வாழஉதவுகின்றன. மக்களை அமைதியாக வழிநடத்திச்செல்லும் இராஜதந்திரமே! உண்மையான ஜனநாயகம்!என கூறுவர். உலகில் வேலைஇல்லாத்திண்டாட்டத்தை ஒழிப்பதுதான்,அரசியல் என்பதன் கருத்தாகஇருக்க வேண்டும்:அரசியல்வாதிகளின் தொழிலாக இருக்கவேண்டும் என அண்மையில் ஒருபிரஞ்சுஇளைஞர்,தொலைக்காட்சிப் பேட்டியில் கூறினார்.பிரஞ்சு வைன்போத்தல்களின் உறையில் வேலையற்ற இளைஞர் தன்தரவும், தொலைபேசி இலக்கமும் பொறித்தமையால் விடயம்அறிந்து தொழில் தருவோர் பலர் நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து சிலருக்கு வேலையும் வழங்கினராம்.

நோர்வே போன்ற நாடுகள் வேலைக்கழகங்களை,வேலையற்றோரே சேர்ந்து உருவாக்கி இயங்க உதவுகிறது.வழிகாட்டல்,கணணி பயிற்சி,சுயதொழில் ஆரம்பிக்கபயிற்சி சுயதொழில் முதலீட்டுக்கடன்,நிதிஉதவி,தொழில்நுட்பம் என பலவித ஊக்கங்களும் தருகிறது.இந்த முறைகளை அரசுகள் மட்டுமன்றி கட்சிகள்,சங்கங்கள்,தொழிலாளர் அமைப்புகள்,முதலாளிஅமைப்புகளும் கூட ஆரம்பிக்க உதவலாம். வேறும் பல நல்லவிடயங்களை மேற்குநாடுகளிடமிருந்து நாம் கற்புதுடன் அவற்றை காலதாமதமின்றி வறியநாடுகட்கு அறிமுகம் செய்வதும் முக்கியம்!

உதாரணம்:

①வாக்களிப்பு முறையை தபால் சேவையூடாகவே நடாத்தல்.இதனால் அதிகநிதி மீதமாகுமாம்.பாரியவாக்கு மோசடி இராது.ஆனால் தபால்காரருக்கு அதிகமான பாதுகாப்பு தேவைப்படும்.

②தேர்தலின் முன் சகலகட்சிகளின் நேரடிவிவாதங்களை,தொலைக்காட்சியில் முக்கியபிரச்சனைகட்கு இடமளித்து ஒழுங்குசெய்தல்.

③பிரதமர், ஜனாதிபதி,மற்றும் அரசியல் பதவிகளை சுழற்சிமுறையில் சகலஇனமக்களும் தம்வீதசாரத்துக்கேற்ப காலத்தைப் பிரித்து வழங்கல்.ஒருநாட்டில் தொழில், கல்வி, நிலப்பங்கீட்டில் உதாரணமாக 70வீதம் பெரும்பான்மை இனத்துக்கும்,30வீதம் சிறுபான்மையருக்கும் எனவழங்கப்படல் போல்,காலமும் ஆட்சிக்காலம் 10வருடமெனில், 7வருடம் பெரும்பான்மையர் ஆளவும்,3வருடம் சிறுபான்மையர்,ஆளவும் வழங்கப்படும். உதாரணமாக ஐரோப்பா பாராளுமன்றில் சிறுபான்மையரான மக்களுக்கு கூட தலைவர் பதவிக்கு உரித்துண்டாம்.இதனால் சகலரும் சமம்!எனும் உணர்வு உண்டாகுமாம்.ஆனால் இது ஆதிக்கஉணர்வுள்ள,பெருந்தன்மையற்ற பெரும்பான்மையரால் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படாது!

## ஐரோப்பிய சமூகக்கொள்கை:

உலகரீதியான வர்த்தகம்,உற்பத்தி,புதியதொழில்நுட்பம் என்பன நம்சமூகம்,தனிமனிதர்,தொழில் என்பவற்றை கடுமையாக பாதிப்பதால்,எம் அங்கத்துவநாடுகள் பாரிய பொருளாதார,சமூகபிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன.இது பெரும்சவால்! சவால்களை எதிர்நோக்க ஐரோப்பாவுக்கு,பரந்தஅடிப்படையில்,தூண்டக்கூடிய,முன்னோக்கிய சமூககொள்கைகள் அவசியம்!

வளர்ச்சி,போட்டியிடுதகுதி,தொழில் எமக்கு முக்கியஅம்சம்!

தொழிலாளர் சட்டம்,சுகாதாரமும்–பாதுகாப்பும்,மக்களின் சுயாதீன அசைவு,ஆண்–பெண்சமஉரிமை சமசந்தர்ப்பம்,சமூகபாதுகாப்பு என்பன இங்கு கருதப்படும்.

இப்படி நடப்பதால் அங்கத்துவ நாடுகள்,சமூகங்கள்,தொண்டர்–குடிமக்கள் அமைப்புகள்,பிரசைகள்,சர்வதேசஅமைப்புகள் என்பனவற்றிடையே புதியஒத்துழைப்பு தூண்டலை ஏற்படுத்தும்.

21ம்நூற்றாண்டை நோக்கிய ஐரோப்பாவின் பயணத்தில் பொருளாதார முன்னேற்றம்,சமூகஒட்டுறவு,உயர் தரமானவாழ்வு இவற்றை பாதுகாப்பதும்,வளர்ப்பதும் பிரதானமாகும்.

எத்தகைய சமுதாயம் ஐரோப்பாவுக்கு வேண்டும்?என்ற கேள்வி ஐயூனியன் அமைப்புகள்,அங்கத்துவநாடுகள்,தொழிற்சங்கங்கள்,தொழில்தருவோர்கள்,பொதுஅமைப்புகள்,தனிமனிதர்கள் போன்றோரிடம் தூண்டிய விவாதத்தின் விளைவே இந்த வெள்ளையறிக்கை வடிவிலுள்ளது

(வரும்)(**European Social Policy**)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

/ஐ.ஐ.ரி. 2351365/3094 ;மாயூரம்.க.பாஸ்கரன்திருச்சி:ஜான்ராஜ்தேவர்;பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப ஈபா கல்லூரி மதுரை: இரா.
இரவி:க.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன் **கல்கத்தா:** பி.சத்யநாராயணன்; டெல்லி:இரா.ஜெயசேதுபதி::
கதிர்.சம்பத்குமார் **கேரளா:** ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்.**கைதராபாத்:** என்.ஆர்.இலட்சுமணன்;

## நோர்வேயிலிருந்து......................!

### அன்பு நண்பா!

உலகின் பலபகுதியிலிருந்தும் தமி
ழர்சமுதாயம் தமது விடயங்களை
சர்வதேசதமிழருடன் பகிர,மிகுந்த
ஆர்வமாகவுள்ளது.நோர்வே,மற்றும்
பன்னாட்டு வாசகர்களிடமிருந்தும்
வரும் நூற்றுக்கணக்கான கடிதங்
களையும்,ஆக்கங்களையும்,பிரசுரிக்க
முடியாவிடினும் தரமானவை நிச்ச
யம் காலதாமதமாயினும்பிரசுரமாகும்.
இணைப்பாளர்கள் தரமான ஆக்க
ங்கள்,பேட்டிகள்,பிரயோசனமான தம்
நாட்டுக்கல்வி,தொழில்வாய்ப்பு,தகவ
ல்கள்,தமிழர்வாழ்வில் முக்கியம்
வகிக்கும் அமைப்புகள்,கட்சிகள்,
சங்கங்கள்,விடுதலைஅமைப்புகள்,
அறிஞர்கள்,பொதுநூலக,கல்லூரி
பல்கலைக்கழகநூலகமுகவரிகளை
அனுப்பி உதவும்படி அன்புரிமையு
டன்வேண்டுகின்றோம்.புதிய ஆலோ
சனைகள்,யுக்திகளை உலகதமிழர்
தம்முள் பகிரவேண்டும்!என்பதே
எம் அவா!1994,1995களில் சர்வதேச
தமிழரை அன்பளிப்பாக பெற்றவர்க
ள் ஏதாவது பங்களிப்பை(சந்தா,
நிதிஉதவி,ஆக்கங்கள்,மற்றும் வளர்
ச்சிப்பணிகள்,ஆலோசனை,உங்கள்ந
ாட்டுசஞ்சிகை,நூல்களை அனுப்ப
ல்)நல்குமாறும் வேண்டுகின்றோம்!
இதோ சில உலகதமிழர்செய்திகள்:

### லண்டனில் தமிழ்சிறுமி சாதனை!

எட்டுவயதுள்ள லக்சுமி சிறிகந்தரா
ஜா தமது முதலாவது ஆங்கில
கவிதைநூலை வெளியிட்டு சகலர
தும் பெரும்பாராட்டை பெற்றுள்
ளார்.09-12-95ல் விம்பிள்டன் பார்க்
கவுஸ் பாடசாலையில் நடந்தவிழா
வில் பிரதமவிருந்தினராக கல்விஆ
ணையாளர் செல்வி.ஜெனி கைன்ஸ்
மற்றும் வட்டாரமுதல்வர் ரொனி
கொல்மண்,கவிஞரும்,கவுன்சிலருமா
ன பற்றிக் குணான்,அதிபர் றிச்சாட்
கிங்,ஆசிரியை டெபி லூயிஸ்,முன்
னாள் அதிபர் திருமதி.ஆனந்தநாத
ன் ஆகியோர் லக்சுமியின் கவித்திற
னை வியந்து பாராட்டினர்.கவிதை
புனைய சிந்தனாசக்தியும்,சொற் பிர
யோகமும்,ஈடுபாடும்உதவுகிறது,என
கவிஞர் குணான் கூறினார்.பிரிட்டி
ஷ் எழுத்தாளர் ஜெவ்றி ஆர்ச்சர்
பிரபு,பி.பி.சி.வானொலி கவிஞர் சார்ல்
ஸ் தொம்சனும் பாராட்டுரைவழங்கி
யுள்ளனர்.சர்வதேசதமிழர்,மேலும்பல
நூல்களை இவர்வெளியிடவாழ்த்
துகிறது .தகவல்: மு.ஆறுமுகம்

## ஒஸ்லோவில் கருத்தரங்கு!

ஈழத்தமிழ்அகதிகட்கு அவசரஉத
வி வழங்கும்படி கோரி,தமிழர்
ஒருங்கிணைப்புக்குழு, நோர்வே
தொண்டர்தாபனங்களை,அழைத்து
கருத்தரங்கை,10.11.95 நடாத்தியது.
தலைவர் ராஜன் செல்லையா,
(இன்றையநிலை பற்றி)பத்திரிகை
யாளர் றோய்.குறவல்(யாழ்.அனுபவ
ங்கள்பற்றி),யாழ்.மருத்துவபீடதலை
வர் டாக்டர்.என்.சிவராஜா(மருத்து
வ,போசாக்குஅவசரஉதவித்தேவை
பற்றி),றெட்பாணாபிரதிநிதி.மார்குஸ்
அக்ஸ்லாந்த்(ஈழஅகதிகட்கு உதவி
யஅனுபவம் பற்றி)உப்சாலா பல்க
லைக்கழகபேராசிரியர்.பீற்றர் ஷல்க்
(சமாதானமும்,தடைகளும் பற்றி)
உரையாற்றினர்.தமிழர் அமைப்புகள்
பிரதிநிதிகள்,நோர்வேபாதுகாப்பு
அமைச்சில் பணிபுரியும் திரு.சச்சி
மயில்வாகனம்,சர்வதேசதமிழர் ஆசி
ரியர்(இலங்கைஅரசின் சர்வதேசஉ
தவிஅனுமதிமறுப்பு,சர்வதேசபத்திரி
கையாளர்அனுமதி மறுப்பு பற்றி
நோர்வேஅரசும்,உதவிஅமைப்புகளு
ம்,ஐ.நாவும் உடன் தலையிடுமாறு
வலியுறுத்தி)கருத்துபரிமாறினர்.
மாலை சுமார் 2000தமிழர் ஆர்ப்பா
ட்டஊர்வலம் நடாத்தினர்.

### மலேசியதமிழர் ஆட்சேபமனு!

இலங்கையில் தமிழர் இனப்படுகொ
லைக்குஎதிராக,மலேசிய ஐ.நா.பிரதி
நிதியிடம்,மனிதஉரிமை தமிழர்ஆத
ரவுக்குழு,அமைதி ஆதரவுமையம்
,பலதமிழர் இயக்கங்கள்,அரசியல்கட்
சிகள் ஆதரவோடு, ஆட்சேபமனு
வை 30.11.95 கோலாலம்பூரிலுள்ள
ஐ.நா.அலுவலகத்தில் சமர்ப்பித்தன.
மனிதநேயம்கொண்ட பலதமிழர்
கலந்துகொண்டனர்.-எஸ்.ராமசாமி

### ஜேர்மனியில் இந்துமாமன்றவிழா!

ஜேர்மனி சுவேற்றா ஸ்ரீஅம்பாள்ஆல
யம்,இந்துமாமன்றம் இணைந்து,
10ம்ஆண்டு நிறைவுவிழாவை சிற
ப்பாக கொண்டாடினர்.சமயஅறிவுப்
போட்டி,பண்ணிசைப்போட்டி,சிறப்பு
ரை(எம்.சொக்கலிங்கம்-முத்து
சொக்கன்)பிரதமஉரை(கவிஞர்.முகி
ல்வாணன்),பரதநாட்டியம்(கீதாஞ்சலி
-கிளவ்ரியா சேவியர்,நிஷாந்தி-கஸ்
தூரி.கனகரத்தினம்)கர்நாடகஇசைக்
கச்சேரி(திருமதி.தர்மினி தில்லைநா
தன்)இன்னிசைக்கச்சேரி(ஹப்பிரோன்
இசைக்குழு)யும் இடம்பெற்றன.
அறிவிப்பாளர்:என்.ரி.ஜெகன்
-த.புவனேந்திரன்,ஜேர்மனி

## பேராசிரியரின் கொழும்புஅனுபவம்:

நோர்வே, ஓஸ் விவசாயப்பல்கலைக்
கழகத்தில், நோர்-அக்றிக் பிரிவில்
பேராசிரியராகக்கடமைபுரியும்,டாக்டர்
என்.சண்முகரத்தினம் ஐப்பசி-95ல்
நோராட்உதவிதாபன ஆலோசகராக
இலங்கை சென்றுவந்தார்.அவரது
மறக்கமுடியாதஅனுபவம்பற்றி,ஒரு
பிறந்தநாள்விழாவில் சந்தித்தபோது
பகிர்ந்துகொண்டவை இதோ:
-கிழக்கிலங்கைபுனரமைப்புதிட்டம்
காரணமாக நான் 8-கிழமைகளை
இலங்கையில் கழித்தேன்.யாழ்ப்பா
ணத்தில் கொடியேற்றிய மார்கழி.5ல்
கொழும்பு,கனத்தையிலுள்ள,மொடல்
பாம்வீதியில்,ஒரு ஐரோப்பியநிறுவன
பிரதிநிதியைச் சந்திக்கச்சென்றேன்.
சற்று வேளையாகப்போனதால்,அவ
ரை சந்திக்கமுடியவில்லை.என்னிட
ம் இருந்த மொபில் தொலைபேசியி
ல் ராக்சியை அழைக்கமுயன்றேன்.
அது ஒரு ஒதுக்குப்புறமானபகுதி.
திடுதிப்பென சிங்களகாடையர்கள்
சுமார் 40பேரால் சூழப்பட்டேன்.புலி!
எனச் சந்தேகப்பட்டு பலவிதமான
கேள்விகட்கும் ஆளானேன்.என்
அடையாளஅட்டையை காட்டும்ப
டி வலியுறுத்தினர்.நான் மறுத்து
விட்டு சிங்களம்,ஆங்கிலத்தில்
நாசூக்காக உரையாடி,பொலிசாரை
வரவழைத்தால் என் அடையாள
அட்டையை காட்டுவேன்!எனக்
கூறினேன்.தமிழர் என்பதால்தானா
கரைச்சல் தருகிறீர்கள்?என வினா
விவிட்டு,இதோ!இந்த தொலைபேசி
யை பாவித்து பொலிசை கூப்பிடு
ங்கள்! எனக்கூறினேன்.அதற்கும்
பயந்தது காடைக்கூட்டம்,தொலை
பேசிக் குண்டோ! எனநினைத்து!
தாம் பாதுகாப்புக்குழு என்றும்,புத்
தபிக்கு விளக்கம் கூறி,தன் அலுவ
லகத்திலிருந்து தொலைபேசி எடுத்
தார்.அதேசமயம் ஐரோப்பியநண்பரு
ம்,பேராதனையில் படித்தசிங்களநண்
பர்-வழக்கறிஞர் களுஆராச்சியும்
வந்துசேர்ந்தனர்.எனது நண்பரும்,
ஜனாதிபதியின்ஆலோசகருமான,ஸ்ரீல
ால் ஜயவர்த்தனாவுக்கும்,உடனே
வரும்படி அழைப்பு விடுத்தேன்.
அவரும் வந்துசேர்ந்து என்னை
விடுவித்தார்:ஆறுதல்கூறினார்:பொர
ளை பொலிசில் பதிந்தபின்,தன்வீடு
கூட்டிச்சென்றும் உபசரித்தார்.பின்
யுக்திய-சிங்களபத்திரிகை ஆசிரியர்
சுனந்த.தேசப்பிரிய இதுபற்றி பத்திரி
கையில் கண்டனமும்தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரஷ்யா/மாஸ்கோ: க.சபாரத்தினம்;ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ்துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்,கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்: பி.ஜெகதீசன்; ஜேர்மனி:க.செந்தில்;0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

## மொரிஷியஸ் பயணம்: மண்ணில் ஒரு சொர்க்கம்!

மாயூரம் சுப்ரமணியன் பாஸ்கரன்

மொரிஷியஸ் இந்துப்பெருங்கடலின் முத்து!போர்த்துக்கீசரான பெட்ரோ மஸ்கரென்னா 1505ம் ஆண்டில் கண்டுபிடித்த இந்தத்தீவு டச்சு, பிரஞ்சு,ஆங்கிலேய ஆதிக்கங்களில் இருந்தது.1968ல் சுதந்திரமடைந்து 1992ல் குடியரசானது.

1865 ச.கிமீ. பரப்பளவுள்ள இந்தத்தீவில் 330கிமீ.கடற்கரை உள்ளது. நீலநிறக்கடலும்,வெள்ளைமணலும் நம்மை சொர்க்கத்தீவுக்கு அழைக்கிறது.சுமார் 75 ஆண்டுகள்(1834–1909வரை)இந்தியாவிலிருந்து தொழிலாளராக–கூலிகளாக–மொரிஷியஸில் குடியேறினர்.இந்தியபூர்விக மொரிஷியர்கள்!மக்களின் தோற்றமும்,பழக்கவழக்கங்களும் நடை, உடை பாவனைகளும்,மொழிகளும் இந்தியசாயலைக் காட்டுகிறது.

இந்தியசமூகத்தினரை ஒன்றுபடுத்தி அவர்கள் நலத்திற்காக அந்தக்காலத்தில் மணிலால் டாக்டர் பாடுபட்டார்.பெரும்பாலானவர்கள் இந்திய பூர்விக இந்துக்களாவர்.

மற்றவர்கள் கிரியோல்,சீன–மொரிசியர் ஆவர்.கிரியோல்,பிரஞ்சு அதிகமாகப்பேசப்படுகிறது.தமிழ்,இந்தி,போஜ்புரி குறைவாகப் பேசப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் இந்தி,தமிழ் கற்றுக்கொடுக்கப்படுகிறது.புதிதாக பதவியேற்றுள்ள பிரதமர் டாக்டர். நவீன் ராம்கூலம் கீழ்த்திசைமொழிகள் வளர பாடுபடுவேன்!என தேர்தல் வாக்குறுதி கூறியுள்ளார். அவருக்கு எமது பாராட்டுகள்! வாழ்த்துக்கள்!

மொரிசியஸில் விமானம் இறங்குவதைப் பார்த்தால்,அழகியகடற்கரையின் நடுவே,பச்சைக்கம்பளம் விரித்தாற்போல் தெரியும்.விமானநிலையம் பெரிதாக இல்லை.

விமானநிலையத்திலிருந்து நகருக்கு போகும்வழியில்,கரும்புவயல்கள் நிறைய உண்டு.முகில்கள் சூழ்ந்த மலைகளும்,சவுக்குத்தோப்புகளுடன் உள்ள,அழகிய நீலக்கடலின் வெள்ளைமணல்களும் கண்கொள்ளாக் காட்சி!காணக்கண் கோடி வேண்டும்.அசைவஉணவு விடுதிகள் நிறையவே உண்டு.சைவஉணவு மிகக்குறைவே!சர்க்கரை(சீனி), துணி தவிர மற்றயவையெல்லாம மொரிசியஸ்,இறக்குமதி செய்கிறது. பாகிஸ்தான் அரிசியும்,நியுசிலாந்து பால்பொருட்களும்,ஆஸ்திரேலிய பழவகைகளும் நிறையக்கிடைக்கின்றன.மொரிஷியர்கள் நன்றாக உணவு உண்டும்,மதுஅருந்தியும் எபிகூரியரின் மகிழ்ச்சியான வாழ்வில் திளைக்கிறார்கள்.மொரிசியர்களின் விருந்தோம்பல் பிரமிக்கவைக்கிறது.எல்லோரையும் குறிப்பாக இந்தியர்களை அன்புடன் வரவேற்கிறார்கள்.என்ன இருந்தாலும் மண்வாசனை விட்டுவிடுமா?

மொரிசியசில் பார்க்கப்பல இடங்கள் உள. போர்ட்லூயிஸ் தலைநகரம்–துறைமுகநகரம்.குவாட்டர் பான்ஸ் ரோஸ்கில்,பியுபாசின்,யோனிக்ஸ்,ப்ளாக் கியுரிபிப் மற்றைய,முக்கியநகரங்கள். போர்ட் லூயிசில் பிரஞ்சு ஏகாதிபத்திய மாளிகைகளையும்,அரசுவிடுதியையும்,ஸ்டேட் பாங்க் ஆப் மொரிசியஸ்,ஏர் மொரிசியஸ் அடுக்குமாடிக்கட்டிடங்களையும் பார்த்து மகிழலாம்.கியுறி பிப்பில் நிறையகடைகளையும்,உணவுவிடுதிகளையும் காணலாம்.ட்ரூ ஆ செர்ப்பில் பாழடைந்த எரிமலைப்பள்ளத்தைக் காணலாம்.பாம்பிள் மௌசஸ் தாவர இயல்பூங்காவும்,கிராண்ட் பாசின் கங்காதலாபும் காணத்தகுந்தவை! கங்காதாலாபில் பலஇந்துக்கோவில்கள் உள்ளன.சிறிது தொலைவில் உள்ள துர்க்கா கோயிலில்(டுகே என பெயர் மருவியுளது)தமிழில் அர்ச்சனை நடைபெறுகிறது. சாங்குவாவிலுள்ள கைலாசம் தமிழ்நாட்டுக்கோயில்களின் பிரதிபலிப்பு! ராசெஸ்டா நீர்வீழ்ச்சியும்,காரமல் பலவண்ணப்பூமியும் அழகானவை! மொரிசியஇந்துக்கள் ஹோலி,தீபாவளி,மகாசிவராத்திரி,தைப்பூசம் போன்ற பண்டிகைகளைக்கொண்டாடுகிறார்கள்.நாம் சென்ற சமயம் ஆங்கிலப்புத்தாண்டு ஆகையால்,அங்கு நள்ளிரவின்பின் வெகுவிமரிசையாக கொண்டாடினார்கள்.

இதில் சிறப்பு என்னவென்றால், எல்லாமதத்தினரும்,ஆங்கிலப்புத்தாண்டைக்கொண்டாடுகிறார்கள்.அதிகாலை வெடிச்சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது. இந்தியாவில் வடக்கிலும், தெற்கிலும்,கொண்டாடும் தீபாவளிவெடிச் சத்தத்தை விட பன்மடங்கு தொடர்ந்து சத்தம்!





வாணவேடிக்கைகளும் கண்கொள்ளாக்காட்சி!புத்தாடைபூண்டு,உறவினர்களை,நண்பர்களை உபசரிக்கிறார்கள்.ஆலயங்களுக்குச்செல்கிறார்கள்.மொரிசியஸ் என்றாலே கடற்கரைகள் தான்!சுத்தமான நீலநிறக் கடல்கள் வெள்ளைமணற்பரப்புடன் சவுக்குத்தோப்புக்கரைகளுடன் காணப்படுகின்றன.கிராண்ட் ஃபே, ஐல் ஆ செர்ப்,பெரிபோ் கடற்கரைகளும்,உன்னதமான மகிழ்விடங்கள்!இவைகளே வெளிநாட்டுப்பயணிகளை கவர்கின்றன.நீர் விளையாட்டுகள் நிறையவே உள்ளன. கடலில் பலவண்ண மீன்கள் பார்க்கப்பார்க்க பரவசம் தருபவை!

மொரிசியஸ் பணம் ரூபாய்–சதம். நூறு சதம் ஒரு ரூபாயாக வகுக்கப்பட்டுள்ளது.பணத்தாளில் தமிழில் எழுதியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

மொரிசியஸ் பற்றி மார்க் டுவெயின் அழகாகத்தான் கூறியுள்ளார். மொரிசியஸ் முதலில் படைக்கப்பட்டது!பிறகு தான் சொர்க்கம் படைக்கப்பட்டதாம்.மொரிசியசிலிருந்து அப்படியே சொர்க்கத்தை பிரதி பண்ணி இருப்பார்களோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: செ.ஜெயகுமார்:த.தர்மசீலன்1.43759171: இ.கிருபானந்தன்
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி;மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;கௌரி ராஜசுந்தரம் யாழ்ப்பாணம்:திருமதி.பி.ஹம்சானந்தி; செ.நடராசா

## புனிதயாத்திரை...........தி.திலீபன்

மிருகங்கள் வயிற்றுப்பசி தீர்க்கக் கொலை செய்கின்றன.ஆனால் மனிதனோ....?போர்வெறி கொண்ட நாய்களின் கரங்களில் துப்பாக்கிகள்! விமானங்கள்!!இப்படிப் பற்பல. கொலைகளை அதிகரிக்கத்தான் விஞ்ஞானம் வளர்ந்ததோ?
இரத்தச்சகதியில் விதைக்கப்பட்ட பிணங்கள்!மண்டை ஓடுகள் நடுவே பறக்கும் வீரக்கொடிகள்! கொலுவிழந்த கோபுரங்கள்!மண்மேடான மாடிகள்!எலும்புக்குத்தோல் போர்த்த மனிதர்கள்!
ஆனால் காக்கைகள்,கழுகுகள்,நாய்கள் மட்டும் நன்கு கொழுத்து இருந்தன.இதுதான் நாம் பிறந்து வளர்ந்த புண்ணியபூமியாகிய இன்றைய யாழ்ப்பாணம்!
மணற்றிடராக கண்ணில்லாத,யாழ்ப்பாடியின் இசைத்திறமையை வியந்து பரிசாக அளிக்கப்பட்ட யாழ்ப்பாணம்,இன்று சோககீதம் பாடுகிறது.
அன்று அந்தக் கிராமத்திலே கொலுவீற்றிருந்த பெரியவீடு கந்தையருடையது! கடை வைத்து அறாவிலைக்கு விற்று,அநியாய வட்டிக்கும் கடன்தந்து மக்களை கறந்து ஏழையாக்கியவர் இவர்!
நான்கு பெண்பிள்ளைகள்.இருவர் கனடாவில்!ஒருமகள் நோர்வேயில்! கடைசி மகளுடன் கந்தையர் இடிந்துபோனவீட்டில் இடியாதஇரண்டு அறைகளை வீடாகப் பாவித்து வாழ்கிறார்.பாரிசவாதம் இவரது வலதுகால்,வலதுகையை விழுத்தி விட்டது.அவரது வலது கால்,கையாக விளங்கினாள் மகள் மல்லிகா! அவளை வெளிநாடுவரும்படி அக்காமார் கேட்டும் மல்லிகா மறுத்து விட்டாள்.தந்தைக்கு உதவுவதே! தன் கடன்! என எண்ணினாள். அப்பாவின்மேல் அளவுகடந்தபாசம். ஆனால் கந்தையருக்கு அவளைப் பார்க்கப்பார்க்க ஒரு குற்றஉணர்வு உறுத்திக்கொண்டே இருந்தது. இடிபாடுகளுக்கிடையில் சாய்மனைக்கதிரையிலிருந்தபடி கடந்தகாலக் கற்பனையில் மூழ்கினார்,கந்தையர்.
முதல்மூன்றும் பெண்குழந்தைகள் என்பதால் 4வது கர்ப்பத்தை,கருச்சிதைவுசெய்ய எண்ணினார்,அவர்! டாக்டரிடம் சென்று சோதனைகள் செய்து கருச்சிதைவுக்கு நாளும் குறித்தாயிற்று!ஆனால் தாயோ.......! அதைக் கடுமையாக எதிர்த்தாள்.
குறித்த நாள் வந்தது!கந்தையரின் காதுகளில் ஓர் குழந்தையின் அழுகுரல் கேட்டுக்கொண்டேயிருந்தது.
–அப்பா! என்னைக்கொல்லாதே! நான் செய்தகுற்றம் தான் என்ன? உங்களைக்காண என்னை இறைவன் அனுப்பியது தவறா?கருவில் உருவானபின் கொல்வதும்,வெளியே உலகுக்கு வந்தபின் கொல்வதும் ஒன்றல்லவா?வேண்டாம்! கொலைப்பழி!அரசும்,மக்களும் கருச்சிதைவை ஏற்பர்! தெய்வம்........! ...........ஏற்காது!................ஏற்காது!!
தன்பிள்ளையை தானே கொல்வது கொடுரமானது என,கந்தையர் முடிவெடுத்தும்,மீண்டும் மனங்கேளாது டாக்டரிடம் சென்றார்.3மாதம் கடந்துவிட்டதால் முடியாது! என கை விரித்துவிட்டார்,டாக்டர்.மல்லிகாவுக்கு இதுபற்றி,எதுவும் தெரியாது. மூத்தமகள்மார் மூவரும்,சிறிதாக இருக்கும்போதே இவர் கேட்கும் எந்த உதவியும் செய்யமாட்டார்கள். ஆனால் கடைசி மகள் மல்லிகா மட்டும் அப்பாவின் குரலுக்காக, உதவிசெய்யஎன்றே காத்திருப்பாள்.
–அன்று நான் கருச்சிதைவு செய்திருந்தால் இன்று என்னைப்பராமரிக்க மல்லிகா இருந்திருப்பாளா? எல்லாப்பெண்களும் சீதனம்,கல்யாணம் என ஆலாய்ப்பறக்கையில், மல்லிகா மட்டும்.....தந்தைக்காக வாழ்ந்து,மெழுகுதிரியானாள்.நான் அவளுக்கு சுமையாய் போனேன்! இப்படி கந்தையர்மனம் கலங்கியது இத்தகைய பிள்ளையை அழிக்கத் துணிந்தேனே!என வெதும்பினார். மனச்சாட்சி உறுத்தியபடியிருந்தது. அதை அவளிடமும் சொல்லமுடியாது தடுமாறினார்,கந்தையர். எப்படியும் இதைச்சொல்லி,மன்னிப்பு கோர நினைத்தார்,அவர்!
–அம்மா மல்லிகா! உனக்கு ஒரு விடயம்,சொல்லவேணும்.இங்க வா!
–பொறுங்கப்பா!தேனீருடன் வாறன். தேனீர் வரமுன்,சிங்கள விமானம் வந்தது!குண்டுகள்,பல போட்டது! தந்தையும்,மகளும் சிதறிப்போயினர்! குடியிருந்தவீடே கல்லறையானது! கந்தையர் கூறவிரும்பிய அந்தத் துன்பக்கதையை கேளாமலே மல்லிகா பயணமானாள்.அந்தகதையும் அவளை வேதனையாக்காது கந்தையருடனேயே மறைந்தது.அவள் பயணம்,புவிக்கோர் புனிதயாத்திரை!

## புதுச்சேரிக்கடிதம்................!

அன்புத் தமிழன்பர்களே,
பல்லாண்டுகாலமாக புதுச்சேரி பாண்டிச்சேரி எனும் இழிபெயரைக் கொண்டே அறியப்படுகிறது.
ஆம்!சுமார் 17 ஆண்டுகாலமாக இதனை மாற்ற போராடிவருகிறார்கள்,தமிழ்காவற்குழுவினைச்சேர்ந்த திரு.இரா.திருமுருகன்,வே.முத்துக்குமாரசாமி,ச.வேல்முருகன்,மு.இறைவிழியன்,சி.நாகலிங்கம்,க.தமிழ்மல்லன்,இலக்கியன்,கோ.தமிழுலகன்,வீ.அருணகிரி,ம.இலெ.தங்கப்பா ஆகியோர்!எமது குழு பொதுக்கூட்டம், துண்டறிக்கைகள்,விண்ணப்பங்கள் வழியாயும் எடுத்துரைத்தது.
புதுச்சேரி உரோமானியர்களுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தை அருகன்மேட்டு அகழ்வாராய்ச்சி, தடங்கள் பலவற்றை தருகின்றன.கி.பி.60ல் பெரிப்பிளசு எனும் கிரேக்கஅறிஞர்,பொதுக்கே எனக் குறிப்பிட்டுள்ளார்.கி.பி.200ல் தாலமி எனும் கிரேக்கஅறிஞர் வரைந்த நிலப்படத்தில் பொதுக்கே எனும் பெயர் இடம்பெற்றுள்ளது.போர்த்துகீசர் புதுஷெய்ரா என வழங்கிவந்துள்ளனர்.டானிஷ்காரர்,டச்சுக்காரர் பொலேசெரே என்றே அழைத்தனர். 1654ல் சாமிசன்,தபுவீல் என்ற பிரஞ்சுக்காரர் அமைத்த நிலப்படத்தில் புதெ செய்ரா என்றே குறிப்பிடப்பட்டுளது.1664ல் இவர்கள் புதிஷேரி என,அழைத்தமைக்கு சான்றுண்டு. 17ம்நூற்றாண்டின் பிரஞ்சுநூல்களில் புதிஷேரி எனும் வழக்கு இருந்திருக்கிறது.17ம்நூற்றாண்டின் இறுதியில் இங்கிருந்த பிரஞ்சு வணிகர்கள் பிரான்சுடன் கொண்ட மடல் தொடர்பில் புதிஷேரி, பாண்டிச்சேரி ஆகியிருக்கலாம்.புதுவை எனும் வழக்கு கம்பர் காலத்திலிருந்தே காணப்படுகிறது.பெருந்தொகை–1135ல் புதுவையம்பதி எனவும்,18ம்நூற்றாண்டில் ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் புதுச்சேரி,புதுவை எனவும்,செஞ்சியில் பிரஞ்சுக்காரர் செப்புக்காசில் புதுச்சேரி எனவும் காணப்படுகிறது.1980ல் புதுச்சேரி எனபெயர்மாற்ற சட்டசபை,இந்தியஅரசைக்கேட்டமை கிணற்றில் இட்டகல்லானது!இலக்கியஅமைப்புகள்,தமிழ்வளர்ச்சிநடவடிக்கைகுழு முயற்சியால் பலரும் புதுச்சேரி என்றே இன்று அழைக்கின்றனர்.

புதுச்சேரி.ச.வேல்முருகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டக்களப்பு:கோபிரவி;மாத்தளை: எம.அருளபிரகாஸ; தவ.சஜிதரன திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் மயில்வேந்த ன்; அட்டன்:பாலா சங்குப்பிள்ளை;குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; கவிற்சலா நந்:எஸ்கதிர்காமநாதன்:
41.12724336; இரா. கலாதரன்:அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி

## தென்கிழக்காசிய பயண அனுபவங்கள்.......!

சிங்கப்பூரில் ஜேர்மனியைச்சேர்ந்த இலங்கைத்தமிழர் ஒருவர்நடத்தும் சிறியவிடுதிஒன்றில் நாம் டாக்சியில் போய் இறங்கினோம்.சுமாரான வசதி கொண்ட அந்த அறையில் எமது பொதிகளை வைத்துவிட்டு,கீழே வந்து தமிழ்நாட்டுப்பாணியில் அமைந்த ஒரு உணவுவிடுதி ஒன்றில் புகுந்தோம்.தோசை,இட்லி இடியப்பத்துடன் நண்டுக்கறி,கோழிக்கறி,ஆட்டுக்கறி,மீன் என பல சுவையில் உணவுகள் கமகமத்துக்கொண்டிருந்தன.ஒரு பிடிபிடித்த பின் மீண்டும் அறைக்கு வந்த எமக்கு அதிர்ச்சியுடன் கூடிய ஆச்சரியம் காத்திருந்தது.

நாம் தங்கியிருந்த அந்தவிடுதி சிவிலுடை அணிந்த சிங்கப்பூர் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது.கேட் வாசலில் இந்தியசாயல்கொண்ட கரிய சுருள்தாடிக்காரர் கையில் வாக்கி–ரோக்கியுடன் காணப்பட்டார்.மேலே நாம் தங்கியிருந்த மாடியிலும் சில இந்திய –தமிழராயும் இருக்கலாம். –சிவில் பொலிசாரும்,ஒரு சீனப்பொலிசாரும் பாஸ்போட்களை சோதிப்பதும்,அட்டகாசத்துடன் மிரட்டுவதுமாக இருந்தனர்.விடயம் இதுதான்!

மலேசியஇளைஞர் ஒருவர் விசா இன்றி அங்கு பணிபுரிவதாயும்,அவரைப்பிடிக்கவும்,மற்றும் இலங்கைத்தமிழர்கள் யாராவது விசா இன்றி உள்ளார்களா?என அறியவுமே அங்கு வந்தனர்.

அவர் பொலிசார் வருவதைக் கண்டதும் பாய்ந்தோடிவிட்டாராம். பொலிசார் மிக முரட்டுத்தனமாக கனடா,லண்டன்,பிரான்ஸ்,டென்மார்க்கிலிருந்து வந்த இலங்கைத்தமிழர்களை நடத்தியதுடன் அடியும் போட்டதாக பலர் குறைகூறினர் உல்லாசப்பிரயாணிகளாக வந்த எம்மை கேவலமாக நடத்த எந்த உரிமையும் பொலிசாருக்கு இல்லை.இது மனிதஉரிமைமீறல்!எனவும் இதுபற்றி சர்வதேசதமிழரில் எழுதும்படியும் முறையிட்டனர்.

சிங்கப்பூர் அரசு இதுபற்றி நடவடிக்கைஎடுத்து இனிமேலும் இப்படி நடவாது பார்த்துக்கொள்ளும் என நம்புவோமாக!அன்றேல் சிங்கப்பூர் ஒரு கெடுபிடியுள்ள பொலிஸ்அரசு எனும் அவப்பெயர் வந்துவிடும்!

பொலிசார் பண்புடன் ஐரோப்பியர், ஆசியர் எனும் பாகுபாடுகாட்டாது வெளிநாட்டவர்களை சமமாக மதிப்பது சிங்கப்பூரின் நற்பெயருக்கு முக்கியம்!

நிலத்தில் குப்பை போடுதல்,சுவிங்கம் ஒட்டுதல்,கார் அல்லது சுவர்களில் வண்ணம் தெளித்தல்,தனியார் பொதுசொத்துக்களை நாசம் பண்ணுதல் கடுமையான தண்டம்,கசையடிகட்கும் ஆளாகவேண்டிவரலாம் இது ஒருவித அச்சம்கலந்த ஒழுங்கை உருவாக்கியுள்ளது.இந்த நடைமுறைகளை பலநாடுகளும் பின்பற்றுவது நல்லதெனவே தோன்றுகிறது.ஆனாலும் மனிதாபிமான எல்லையை அது கடந்தால் சிங்கப்பூர் ஒரு பொலிஸ்அரசு என மற்றநாடுகள் கணிக்கநேரிடலாம்.

தத்தம் கலாசாரத்தை பேணும் பல இனங்கள்,எப்படி அமைதியுடன், ஒருவர் தலையீடு இன்றி மற்றவர்கள் ஒன்றாக வாழவும், தொழில்புரியவும் முடியும்!என சிங்கப்பூர் உதாரணம் காட்டுகிறது.

சீனர்,இந்தியர்,மலேயர்,இந்தோனேசியர் காலங்காலமாக குடியேறி தமது கடும்உழைப்பு,சேர்ந்தியங்குதன்மை, தாங்குமியல்பால் முக்கியவளத்தை அளித்துள்ளனர்.தத்தம் பாரம்பரியம், ருசியான உணவுவகை,வியப்புக்குரிய உடைகள்,கலகலப்பான விழாக்கள்,மாறுபட்ட சமயங்கள் இவைகள் சிங்கப்பூர் வாழ்வை மேலும் மகிழ்ச்சிக்கும்,குதூகலத்துக்கும் உரியதாக்குகிறதேயன்றி ஏன்,இரத்தகளமாக்கவில்லை என்பதன் இரகசியத்தை இலங்கை,இந்தியா,பாகிஸ்தான் போன்றநாடுகள் தூதுக்குழுக்களை அனுப்பி,அறிந்து கொள்ள வேண்டும்!

சீனர்(76வீதம்) சீனாவின் பல மாகாணங்களில் இருந்தும்வந்து பல விதகலாசாரம்,சமையல்முறைகள்,குடும்பதொடர்புகள்பேணல் என பல பெறுமதிகளை தம்முடன் எடுத்து வந்துள்ளனர்.அதிகசமூகஉணர்வும் காரசாரமானசமையலும்,இஸ்லாமிய பெறுமதியும் மலேயர்கள்(15வீதம்) தம்முடன் எடுத்துவந்துள்ளவை! அதீத குடும்பபாசமும்,பல்வர்ணஉடைகளில் ஆர்வமும்,கமகமக்கும் கறிவகைகளும்,குதூகலமான விழாக்களும் இந்தியர்(6.5வீதம்)தம்முடன் எடுத்துவந்த பெறுமதிகள்!







சீனா ரவுண்,அரபுவீதி,குட்டி இந்தியா போன்ற இடங்களில் இவர்கள் பாரம்பரிய,கலைப்பொருட்களை கண்டுகளிக்கலாம்.

அனேகமாக எல்லாசிங்கப்பூரியரிலும் குடும்பபாசம்,கடும்உழைப்பு,தத்தம் இனம்குறித்து பெருமை பொதுவாக காணப்படுகிறது.

ஐரோப்பிய(போர்த்துக்கீச)–ஆசியகலப்புமக்களும்,ஆர்மீனியர்,யூதர்களும்,அரபுக்களும் இங்கு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியர், அதிகளவுவெளிநாட்டு தொழில்வல்லுனர்களும் சீவிக்கின்றனர்.

ஆங்கிலம்,சீனம்(மண்டாரின்),மலே, தமிழ் அரசமொழிகளாக உள்ளன. அனேகர் ஆங்கிலம் பேசுவர்.

நாளாந்த பழக்கவழக்க தரத்தை முன்னேற்றும் நோக்கில்,1979ல் மரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.இந்த வருடாந்தநடவடிக்கை சிங்கப்பூரை சகலருக்கும் நட்பானநாடாக மாற்றிவருகிறது.இந்த முறையை சகல ஆசியநாடுகளும் பின்பற்றினால் நல்லமுன்னேற்றம் காணலாம்.

சிங்கப்பூரில் சுற்றிப்பார்க்க நிறைய இடமுண்டு.ஆனால் பலவற்றின் நுழைவுச்சீட்டுக்கட்டணம் ஆனை விலை!குதிரைவிலையாகஉள்ளது. பல உல்லாசப்பிரயாணிகளை பயமுறுத்துவதாகவே உள்ளது.இதனை சிங்கப்பூர் அரசு உணரும்!என்றே நம்புவோமாக!எதுவும் வர்த்தகநோக்கில்!என்ற நிலை வந்துவிட்டால் அது சிங்கப்பூர் பற்றிய மதிப்பை உடைத்துவிடும் என்பது உறுதி!

(வளரும்)..................என்.எஸ்.பிரபு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை:புருணை: எம்.ஐ.எம்.நகீப் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தாசிங்கப்பூர்:மு.பத்மா கு.இரஞ்ச
குணாளன் மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் இந்தோனேசியா: மெடான்:எம்.நாகலிங்கம்;மு.சந்திரசேகரன்; .கிருஷ்ணா
ஜகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன்;லட்சுமணன் பர்மா:அப்துல் ரசாக்

## ரோமானியாவிலிருந்து ஒரு துன்பமான தமிழ்க்கதறல்!

அன்பு நண்பா!
ரோமானியா நாட்டிலிருந்து நாம்
எழுதும் இந்தத் தமிழ்க்கதறல்
உலகமெல்லாம் கேட்கவேண்டும்!
உரியவர்கள் இலங்கையில் அமை
திகாண தகுந்த நடவடிக்கையை
எடுக்கவேண்டும்!விரைவில் எமது
திரிசங்கு சொர்க்கத்துக்கு முடிவு
வரவேண்டும்,என்ற ஏக்கத்துடன்
இந்தமடலை வரைகிறோம்.
வறிய,பிரச்சனைக்குரிய ஆசிய,ஆபி
ரிக்க,தென்அமெரிக்கநாடுகளில்
இருந்து,செல்வந்த,அமைதியான
மேற்கு ஐரோப்பிய,வட அமெரிக்க
நாடுகளைத் தேடி அகதிகளாயும்,
வேலைதேடியும் செல்பவர்களில்
இலங்கையைச் சார்ந்த நாங்களும்
விதிவிலக்கல்ல!
தமிழ்பேசும் மக்களுடன்,சிங்களவர்க
ளுமுள்ளார்கள் என்பதுதான் இங்கு
புதுமை!
இலங்கையின் இனப்பிரச்சனையின்
அகோரத்தால் அகதிகளாக புறப்பட்
ட ஆயிரக்கணக்கான இலங்கைய
ரில்–சாட்டர்பயணிகள்–எனும் பெய
ர்கொண்டு,ஏஜண்டுகளின் நலனுக்
காக,ஏஜண்ட்டுகளால் தடுத்து
வைக்கப்பட்டிருக்கும் அப்பாவிகள்
நாங்கள்!
பாங்கொக்,சிங்கப்பூர்,மலேசியா,சீனா,
சோபியா,ரஸ்யா,உக்ரெயின்,லெனின்கி
ராட்,துருக்கி ஆகிய இடங்களில்
மிகவறியநிலையிலும்,துயரத்துடனு
ம்,மனமுடைந்தநிலையில் இழிந்த
நிலையில் வாழ்கிறோம்!
இலங்கையில் இருந்து அழைத்து
வந்து,பெருந்தொகையாக,காணி,வீ
டு,நகைஅடைவு வைத்து நாம்
கடனாகப் பெற்ற பணத்தையும்
கறந்துகொண்டு,எம்மை நட்டாற்
றில் விட்டு சாகடிக்கின்றனர்.
ஏஜண்டுகளால்–சாட்டர்–செய்யப்படு
ம் பயணிகள் குறைந்தது 1–2வரு
டங்களாவது–சாட்டர்–நெருப்பு
சிறைச்சாலையில் துன்பமானவாழ்
வை அனுபவித்தவர்களாகவே
இருப்பர்!உலகில் எந்தநாடுகளிலும்
இல்லாத கொடியசிறை இது!
மேலுள்ளநாடுகளில் குறைந்தது 10
பேராவது ஏஜண்டுகள் இருப்பர்.
ஒவ்வொருவரிடமும் 20 பேராவது
–சாட்டர்–பயணிகள் இருப்பர்.
நெருப்பில்லாமல் புகைவது எது?
பசி!பசியே தான்!!பசிவந்தால் பத்து
ம் பறந்திடும்!என்பதுதான் எவ்வள
வு உண்மை!பசியால் பலசமயம்
துடிக்கும் நாம், இறைவனிடம்
கையேந்துவதுபோல் ஏஜண்டிடம்
கையேந்துவது மகா கேவலம்!
இலங்கையில் பயணம் ஆரம்பமாக
முன்,–எந்தப்பிரச்சனையும் இல்லை
நீர் ஜேர்மனிபோனதும் மீதிப்பணம்
தந்தால் போதும்!நாளை பயணம்!
–என்பர்.இலங்கையைவிட்டு விமா
னம் புறப்பட்டதும், அப்பாடா! நம
க்கு புது வாழ்வு!எனநினைத்து
கற்பனையில் சிறகடிப்போம்.
நாம் விமானத்திலிருந்து இறங்கிய
தும்,ஏஜண்டுகளின்–சாட்டர் ராட்சி
யம்–ஆரம்பமாகிவிடும்.கிழக்குஐரோ
ப்பாவில் காலடிவைத்ததும் முதல்
நாள் எமக்கு விருந்துவைப்பர்.
சிலருக்கு அதுவும் கிடைக்காது!
விருந்தின்போதே தமதுவித்தையை
காட்ட ஆரம்பிப்பர்.இலங்கையில்
இருந்து பெரியஏஜண்ட் உம்மிடம்
2000 டாலர் வாங்கி நாளையே
அனுப்பும்படி தொலைபேசியில்
கூறியுள்ளார்,என பெரியகல்லை
தலையில் போடுவர்.பணம் இல்லை
என பயணிகள் மறுத்தாலும்,தமது
வித்தையால் எமது எஞ்சியுள்ள
பணத்திலும் கைவைப்பர்.பணம்
கிடைத்துவிட்டால் ஒருநிமிடமும்
நிற்கமாட்டார்.பறந்துவிடுவர்.இதில்
ஆரம்பமாகும் கண்ணீர்துளிகள்,கா
வேரி ஆற்றையும் மீறி வெள்ளம்
போல் பாயும்.அரைவயிற்று சோற்று
டன் எத்தனைநாட்களைத் தான்
நகர்த்துவதோ?
வறுமையிலும் வாழும் வாழ்வு
பெருவாழ்வு!என்றெண்ணி எங்கள்
பசி,அக்கினிச்சுவாலையை அடக்கி,
கொஞ்சம்மிஞ்சியுள்ள புன்னகையை
வாய்விட்டு சிரிப்போம்.அதிரடி தாக்
குதல் கொரில்லாவீரன் போல் திடீ
ரென ஏஜண்ட் வருவார்.தன் முத்
துப்போன்ற பல்வரிசையை காண்பி
த்து புன்னகை செய்வார்.
எதையுமேசெய்யமுடியாத காவலர்
கள் இல்லாத இரும்புக்கோட்டை,
கிழக்கு ஐரோப்பாவில் நாம் இருக்
கும் வீடுகள்.
ஏஜண்டுகள் தம்முடைய அறிவாற்
றலால் ஒவ்வொருபயணிகளுடைய
உணர்வுகளையும் அறிந்துவைத்
துக்கொள்வர்.இன்று நான்குபேர்
ஆயத்தமாகும்படி வேண்டுவர்.யார்
என்று கூறவேமாட்டார்.மாலையில்
தொலைபேசி மூலம் கூறுவதாகச்
சொல்வர்.தமது சட்டைப்பையில்
எஞ்சியுள்ள பணத்தையோ,அல்லது
வேண்டிவந்த உணவுப்பொருளை
யோ தந்துவிட்டு சென்றுவிடுவர்.
எலும்புத்துண்டை கண்ட நாய்கள்
போல்,பாய்ந்துஎடுத்துக்கொள்வோம்.
வயிற்றுப்பசி என்ன செய்யது?சாட்
டர் பயணிகளான எமக்கு மட்டும்
தான் புரியும்.ஏஜண்டுகளின் இரும்
புக்கோட்டையை எதிர்க்கும் பய
ணிகளும் இருக்கத்தான் செய்கிறா
ர்கள்.ஏஜண்டின் கழுத்துக்கு கத்தி
வருகிறது!எனில் எப்படியாவது
ஒருசிலரை இடம்விட்டு இடம்
நகர்த்தி பம்மாத்துகாட்டுவர்.பணமு
ம் கறப்பர்.பணம் இல்லாவிடில் எம
க்கு உணவு,மற்றும் அத்தியாவசி
யதேவைக்குரிய எதுவும் கிடைக்
காமல் போய்விடும்,என்பதால் மேற்
குஐரோப்பாவிலுள்ள எமது உறவி
னர்,நண்பர்களிடம் இருந்து பணம்
பெற்றுக்கொடுப்போம்.கடலில் கரை
த்த புளிபோல் அது ஆகிவிடும்.
முள்ளில் விழுந்தசேலையை எடுப்
பவனின் நிலையே நம்அவலநிலை!
இத்துயரமான சாட்டர் சிறையிலுள்
ளோர் தம்குடும்பநிலையை நினை
த்து தினந்தோறும் கண்ணீர்மழை
பொழிவர்.தாய்,தந்தை,சகோதர,சகோ
தரியர்,மனைவி,பிள்ளைகள் நிலை
மை தெரியாததால் மனம்சோர்வர்.
திருமணமாகி 2மாதத்தில் மனைவி
யைப்பிரிந்தவர்;பிறந்தகுழந்தையை
விட்டுப்பிரிந்தவர்;திருமணத்துக்காக
மணமகனைத்தேடிச்செல்பவர்: என
பலவிதமானவரும் கலங்கி,தவிப்பர்.
தம்பயணத்துக்காக ஏஜண்டுகளின்
கையைப்பிடிக்கும் பெண்களின்
அவலநிலையை எல்லாம் நினைக்
கும்போது ஒன்றுமட்டும் மனதுள்
உருவாகும்.ஏஜண்டுகளைகொலை
செய்தால் என்ன தவறு?என்ற
எண்ணமே அதுவாகும்.கொலை
செய்வது மிருகத்தனம்! என்பதால்
அந்தஎண்ணமும் அற்றுப்போகும்.
அண்மையில் ஹங்கேரி நாட்டிலிரு
ந்து ஜேர்மனிசென்ற இலங்கைவா
சிகளில் 18பேர்,இறந்ததுயர செய்தி
உலகம்அறிந்தஒன்றாகும்.அந்தப்பய
ங்கர விளைவுக்கு ஏஜண்டுகளின்
பொறுப்பற்றசெயலே காரணம்! என
திட்டவட்டமாக,கூறவிரும்புகிறோம்.
ரோமானியாவிலிருந்து 100க்கும்
மேற்பட்ட அகதிகள் 5மாதம் அனு
பவித்த நரகவேதனை வாழ்விலிரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் :பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

ந்துவிடுபடவே,35பேரை அடைந்து கொண்டு புறப்பட்ட ஏஜண்டின் மூடியவண்டி,காற்றின்றி 18 பேர் உயிரைக்குடித்தது.
அந்தப்பயங்கரசெய்தியை அறிந்த ரோமானியாவிலுள்ள ஏஜண்டுகள் உடனே தலைமறைவாகிவிட்டனர்.

யாருமே எதிர்பாராத பட்டினிச்சாவுகள் எத்தனை?எத்தனையோ......??
எதிர்காலத்தில் எம்மைப்பற்றி நீங்கள் கேள்விப்படலாம்.சிலசமயம்,யாரும் அறியாமலே எமது உயிர் போய் விடலாம்.ஏஜண்டுகளின் மரணப்பிடியில் நாங்கள் அகப்பட்டுள்ளோம்.
இலங்கையிலுள்ள பொறுப்பற்றவர்களின் அரசியலால் இலங்கையில் மட்டுமன்றி,உலகமெங்கும் ஏங்கி அலையும் தமிழர் படும் துன்பம் சொல்லிமாளாது!இதற்கு மனிதநேயம் கொண்ட யாராவது இருந்தால் உதவுங்கள்!இதுவே எம் அவா!

**ரோமானியாவில் தவிக்கும் தமிழ்அகதிகள்.**

(கிழக்குஐரோப்பியமற்றும் பிறநாடுகளில் தவிக்கும் தமிழர்கட்கு முக்கியதகவல்கள்,ஐ.நா.அகதிகட்கான தூதுவர், செஞ்சிலுவை சங்கம், பிற உதவிஅமைப்புகள்முகவரிகள், ஆலோசனைகள் தேவைஎனில் கடிதம்,ஃபக்ஸ்,தொலைபேசி மூலம் தொடர்புகொள்க!தங்கள் முகவரிகளை தந்தால் சர்வதேசதமிழர் அன்பளிப்பாகஅனுப்பப்படும்.உங்கள் துன்பம் தாங்கிவரும் மடல்கள் முக்கியத்துவத்துடன் பிரசுரமாகும். இவர்கட்கு உதவ விரும்பும் அன்பர்கள் தொடர்புறுக! ஆ-ர்)

## மாஸ்கோவில் ஒரு உண்மைச்சம்பவம்!

**ஆர்.சுகுமார்-மாஸ்கோ**

அது ஒரு வழமையான குளிரான இரவு!காலம்:1995 ஐப்பசி 31ம்திகதி சுமார் 9 மணி இருக்கும்.
30 வயது மதிக்கத்தக்க சுவேதா செல்லத்துரை எனும் யாழ்ப்பாணப் பெண்,3மாதக்கைக்குழந்தையுடன், நாமிருக்கும் வீட்டிற்கு,இலங்கைத் தூதரகத்தைச் சேர்ந்தவர்களால் கொண்டு வந்துவிடப்படுகிறார்.
சம்பாசனை ஆரம்பமாகிறது!
சுகுமார்:சுவேதா என்பதுதானே உங்கள் பெயர்.........!
சுவேதா:ஆம்!அது எப்படி உங்கட்குத்தெரியவந்தது........?
சுகு:இலங்கைத்தமிழ்ப்பெண் ஒருவர் கைக்குழந்தையுடன் தங்கஇடமின்றி தவிக்கிறார். பயண ஒழுங்குகள் இரண்டு நாட்களுள் செய்து அனுப்பும்வரை உவ்விடம் தங்கஉதவும்படி இலங்கைத்தூதரகம் கேட்டதால் தெரியவந்தது.
சுவே:ஏன் தூதரகம் எம்மை பயணிகள் விடுதியில் வைத்திராது, இங்கு கூட்டிவந்தனர்......?
சுகு:காரணம் அங்கு வதிபவர்களில் திரு.சபாரத்தினம் அவர்களைத் தவிர அனைவரும் சிங்களவர்கள். அவர் தொழில்ரீதியாக மட்டுமே, இயங்க அரசு பணித்துள்ளது. சிங்களவர்கட்கு உங்கள்பிரச்சனை அவசியமற்றது.அவர்கட்கு உங்களை அங்குவைத்திருக்கவிருப்பமில்லை.இனதுவேசம் இடமகொடுக்கவில்லை.இப்படி தமிழர்கட்கு பாகுபாடு காட்டும் தூதரகங்களின் அநியாயத்தை வெளிக்கொணர வேண்டும்.வெளிநாட்டமைச்சரை தமிழராக வைத்துக்கொண்டே இப்படி நடக்கிறது.அமைச்சர் தகுந்தநடவடிக்கை எடுக்கவேண்டும். உங்கள் அனுபவத்தை சர்வதேச தமிழர் மூலம் பகிர்வீர்களா?
சுவே:ஆமாம்!கண்டிப்பாக!எமது தமிழர்கள் பந்தாடப்படுவதை சகல மக்களும் அறியவேண்டும்.
ஆரம்பத்திலிருந்து கூறுகிறேன். நான் பலாலியிலிருந்து,கொழும்புவந்து ஜேர்மனி புறப்படும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம், எமக்கு நெருங்கிய உறவினர் ஒருவரை பதிவுத்திருமணம் செய்து கொண்டேன்.இருவரும் சேர்ந்து செல்வதாக முடிவுசெய்து,13.08.93ல் மாஸ்கோ வந்துசேர்ந்தோம்.
எம்மை ஒருவர் விமானநிலையத்திலிருந்து கூட்டிச்சென்று,சிறியவீடு ஒன்றில் தங்கவைத்தார்.2அறைகள் கொண்ட வீட்டில்,சுமார் 15பேர் இருந்தோம்.வாரஇறுதியில் ஜேர்மனிக்கு எம்மை அனுப்புவதாகக் கூறியவர்கள்,500நாட்கள்மட்டில் வைத்திருந்தார்கள்.ஒழுங்கான சாப்பாடும் இல்லை.கடைசியாக மின்ஸ் எனும் நகருக்கு கூட்டிவந்தார்கள்.10நாட்கள் நின்றோம்.பின்பு லித்துவேனியாக்காட்டில் 10நாட்கள் இருந்தோம். இங்கிருந்து போலந்து சென்றோம். பஸ்ஸிலிருந்து நாம் இறங்கியதுதான் தாமதம்,பொலிசார் பிடித்து,19 நாட்கள் வைத்திருந்தனர்.பிறகு எம்மை வெளியேவிட்டதும்,கர்ப்பிணியான என்னைத்தனியேவிட்டு விட்டு கொழும்பு போன கணவரிடமிருந்து எந்தத் தகவலுமில்லை. அவர் கொழும்பில் கைதானாரா? அதன்பிறகு அவருக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை!
பின்பு எம்மை உக்ரேயின் நாட்டுக்கு முகவர் அழைத்துச்சென்றார். எனது கணவரின்றி,கர்ப்பிணியான நான் எப்படி தனியே இங்கு இருப்பது?என்றுகூறி என்னை இலங்கைக்கே அனுப்பும்படி முகவரிடம் கேட்டுக்கொண்டேன்.ஆத்திரம் கொண்டமுகவர்,குடித்துவிட்டு வந்து கர்ப்பிணி என்றுகூடப் பார்க்காமல் பலதடவைகள் அடித்துத்துன்புறுத்தினார்.பல தடவைகள் அடிஅவஸ்தைகள் பட்டதால்,சில இலங்கை மாணவர்கள் உதவியால்,உடுத்திருந்த உடுப்புடன் மின்ஸ் நகருக்கு மீளவும் வந்துசேர்ந்தேன்.
மின்சாரவண்டியில் வந்தநேரம்,பிரசவவேதனையால் அவதியுற்றேன். அன்புள்ளம் கொண்ட மனிதநேயர்களால் மின்ஸ் நகரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன்.அதன் பிறகு எந்த இலங்கையரையும் சந்திக்கவில்லை.பிரசவத்தில் ஒரு பெண்குழந்தையைப் பெற்றெடுத்தேன்.3மாதங்கள் வைத்தியசாலைச் செலவில் தங்கியிருந்தேன்.என்னையும்,குழந்தையையும்,வைத்தியர்களும்,தாதியர்,ஊழியர்களும் உறவினர் போல் கவனித்துக்கொண்டனர்.பின்பு மின்ஸ் நகரில் இலங்கைத்தூதரகம் இல்லாதால் என்னை இலங்கைக்கு அனுப்பும்படிகேட்டு,மின்சாரவண்டியில் மாஸ்கோவுக்கு ஏற்றிவிட்டனர்.எனக்கும்,குழந்தைக்கும் குளிருடை வாங்கித்தந்து அனுப்பிவைத்த டாக்டர்களான மனிதநேயர்கட்கு ஆயிரம் நன்றிகள்!
தனியே மாஸ்கோ வந்திறங்கிய எனக்கு திகைப்பாக,தூதரகவழி தெரியாது தடுமாறியபோதுதான்,ஒரு ரஸ்யப்பெண் உதவிக்குவந்து,எனது சுமைகளையும் தூக்கிக் கொண்டுவந்து,வழிகாட்டி தூதரகத்துக்குள் கொண்டுவந்து விட்டார்.
தூதரகத்தில் பணிபுரியும் ஒரேஒரு தமிழர் திரு.சபாரத்தினம்!பண்பானவர்!ஆனால் அவரால் தனிப்பட்ட ரீதியில் எந்தஉதவியும் செய்ய முடியாதநிலை!ஏனையோர் சிங்களவர். இன்னும்2நாளில் இலங்கை அனுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள், நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம்!

பிவைப்பதாகக்கூறிதூதரகம் மூடும் நேரம்,கொச்சிக்கடையைச்சேர்ந்த தமிழர் ஒரு ரஸ்யக்குடும்பத்தவருடன் தங்கியிருப்பதாககூறி இங்கு கூட்டிவந்தனர்.
சுமார் 10 நாட்கள் சுகுமாரின் ரஸ்ய நண்பர்கள்வீட்டில் தங்கிய சுவேதா மீண்டும் தூதரகம் செல்ல,வேறு ஒரு தனிவீட்டில் 09.12.95 குடியமர்த்தப்பட்டார்.யாருமற்ற அங்கு திரு. சபாரத்தினம் அவர்கள்தான் தனது சொந்தக்காசில் எனக்கும், குழந்தைக்கும் உணவு,பால் ஆகியவற்றை பெருந்தன்மையுடன் வாங்கித்தந்து உதவினார்.தூதரகத்தில் பணிபுரியும் சிங்களவர் யாரும் ஏன் என்று எட்டியும் பார்க்கவில்லை. தமிழர் மனிதர்! என்ற சிந்தனையும் அவர்களிடம் இல்லை.
இங்கு வந்து 14 நாட்கள் ஆகின்றன.இலங்கைத்தூதரகம் இவரை அனுப்ப எதுவிதநடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.
தம்மிடம் டிக்கற் செய்ய காசு இல்லையாம்.அதனால் வெளிநாட்டிலிருந்து காசு எடுத்துத் தந்தால் தாங்கள் டிக்கட் எடுத்து அனுப்புவதாக கூறுகிறார்களாம்.
மாஸ்கோ தூதரகம் போலன்றி, வேறு பலநாடுகளிலும் உள்ள இலங்கைத்தூதரகங்களும்,தமிழர்க்கு ஒருநீதி:சிங்களவர்க்கு ஒருநீதி என நடக்கின்றன.தமிழர்களை மதிப்பதே இல்லை.இலங்கைஅரசும், அமைச்சர் கதிர்காமரும் தான் இதற்கு வழிகாணவேண்டும்.
தமிழர் பிரச்சனை நீதி,அமைதி வழியில் இலங்கையில் தீர்க்கப்பட்டால்தான் உலகில் பலஇடங்களில் துன்பத்தில்அலையும் தமிழர்க்கு விடிவுவந்து,நாடு திரும்பலாம். உலகெங்கும் அலைவது குடிமக்களின் தவறல்ல!குடியரசின் தவறே. சமஉரிமை மறுக்கப்பட்டதால்,மனிதன் நிலைதடுமாறி ஆத்திரம் கொள்கிறான்.பயங்கரவாதி என பட்டமும் சூட்டப்படுகிறான்.
இலங்கையிலும்,உலகின் பலபகுதியிலும் தமிழர் அலைவதால் இலங்கைக்கேற்பட்டுள்ள அவப்பெயரை நீக்குவது இலங்கையில் நீதியுடன் ,அமைதியான தீர்வை எவ்வளவு விரைவில் அதிபர் கொண்டுவருவார் என்பதிலேயே தங்கியுள்ளது. இதற்கு தமிழீழவிடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பும் மிகஅவசியம்!!

## தென்கொரிய பல்கலைக்கழக மாணவியுடன் ஒரு பேட்டி!

-------------------

**இலங்கை–காங்கேயனோடை,**
**ஏ.யு.எல்.ஏ.ஹில்மி,**
**தென் கொரியா.**

-----------------

சீனாவுக்கும்,யப்பானுக்குமிடையே கம்யுனிச வடகொரியாவும், ஜனநாயக தென்கொரியாவும் உள்ளன. சுதந்திரவர்த்தகபொருளாதாரக்கொள்கையால் தென்கொரியா செழிக்க, கம்யுனிசக்கொள்கையால் வடகொரியா வாடுகிறது.
வடகொரியா 122,370 ச.கிமீ பரப்பும், 1987ல் 21.4மிலியன் சனத்தொகையும் கொண்டிருக்க,தென்கொரியா 99,143ச.கிமீ.பரப்பும்,1987ல்42மிலியன் சனத்தொகையுமாக இருந்தது.
தென்கொரியாவில் வசிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததையிட்டு மகிழும் அதேசமயம்,உலகம்,பல்வேறு மனிதரை சர்வதேச தமிழர்கட்கு அறிமுகம் செய்யும் உயர்நோக்கில் சொச்சிவொன்னில் அமைந்துள்ள கொங்இக் பல்கலைக்கழக பொறியியல்பீடமாணவி செல்வி.மின் ஜொங்குடன் ஒருபேட்டியை அவரது இல்லத்தில் கண்டேன்.
இவர் சுமார் 1 வருடத்தின் முன் அறிமுகமானவர்!இவரை முதன்முதலில் எமது நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த பயிற்சிப்பாசறையில் தான் சந்தித்தேன்.மின் துறையில் தான் மின் ஜொங் இறுதியாண்டில் பயிலுகிறார்.24 வயதுள்ள இவர், அழகிய புன்சிரிப்பும்,உதவிபுரியும் மனப்பான்மையும்,எதையும் சலிக்காமல் செய்யும் பண்பும் உள்ளதால் அனைவரையும் கவர்கிறார்.
முதலில் வணக்கம் கூறிக் கை குலுக்கிக்கொண்டதும் எனது பேட்டி ஆரம்பமாகியது.

கேள்வி:முதலில் தங்களைப் பற்றிக் கூறமுடியுமா?
பதில்:30 வயதுக்கு முன் டாக்டர் பட்டம் பெறவேண்டும் எனும் இலட்சியத்தில் கவனமாகப்படித்து வருபவள் நான்! வெளிநாட்டவரில் நல்லமதிப்பு வைத்துள்ளேன்! என்னைப்பற்றி நீங்கள் அறிந்தவைகளைத்தவிர கூறுவதற்கு அதிகம் இல்லை!
கேள்வி:வெளிநாட்டவர் பற்றி.......!
பதில்:சகலரும் மனிதர்கள் என்பதனால் எல்லோரும் அடிப்படையில் ஒன்றுபட்டவர்களே!
கேள்வி:கொரியா பற்றிக் கூறுங்கள்?
பதில்:1945ம் ஆண்டுக்கு முன் பெரியநிலப்பகுதியாகவும்,ரஸ்ய,சீன எல்லைகளைக்கொண்டதாயும் அமைந்திருந்தது.ஆனால் இக்காலப்பகுதியின் பின் 1950ல் இருதுண்டுகளாக நாடு பிரிக்கப்பட்டது. இதனையே வடகொரியா,தென் கொரியா என அழைத்தனர்.
கேள்வி:இத்தகைய விளைவுக்குக் காரணம் என்ன?
பதில்:அன்றைய காலப்பகுதியில் ஆட்சிபுரிந்தவர்கள் விட்டபிழை எனவே கூறலாம்.
கேள்வி:அதை விபரிக்க முடியுமா?
பதில்:அன்றையகாலப்பகுதியில்,வாழ்ந்து,ஆட்சிபுரிந்த தலைவர்கள் பிறநாடுகளின் தலையீட்டைப் போற்றியும்,பிழையான தந்திரமான அவர்களது கருத்துக்களை சரி என மக்களுக்கு எடுத்துரைத்ததும்,பெரியநாடுகளுடன் இணையும் ஆசையை வளர்த்துக்கொண்டமையும்,பிரதானகாரணி எனலாம். இருந்தும் இதுமட்டுமன்றி இன்னும் பலகாரணிகளும் உண்டு.
கேள்வி:உங்கள்நாட்டு மக்கள் பற்றியும்,வடகொரியா மக்கள் பற்றியும் சற்றுக்கூறமுடியுமா?
பதில்:இருநாட்டு மக்களும் அடிப்படையில் மொழி,உடலமைப்பு,தோற்றம் என்பவற்றில் அதிகமாற்றம் அற்றவர்கள்.ஆனால் உளவியல்ரீதியாக பாரியவேறுபாடுகள் இன்று உளது.
கேள்வி:தென்கொரியமக்களைப்போல் வடகொரியமக்களும் கடினஉழைப்பாற்றல் கொண்டவர்களா?
பதில்:ஆம்!நிச்சயமாக! எம்மைவிட அதிகஉழைப்பாற்றல்,மட்டுமன்றி போர்விடயங்களிலும் அதீத தேர்ச்சி கொண்டவர்களாயும் உள்ளனர்.
கேள்வி:நான் வடகொரியாவை பார்த்ததில்லை!உங்களால் ஓரளவு அறியமுடிந்தது.அது தென்கொரியா போல் வளர்ந்தநாடா?
பதில்:பொருளாதாரரீதியாக முன்னேறியதாக கூறமுடியாது.ஆனால் இராணுவரீதி,போர்ரீதியாக முன்னேறியநாடாகவே வடகொரியா விளங்குகிறது.
கேள்வி:இருநாட்டு இணைவையும் விரும்புகிறீர்களோ?
பதில்:ஆமாம்! எமது எதிர்பார்ப்பும் அதுவாகத்தான் உள்ளது.

www.tamilarangam.net

சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

இளைஞர்கள்யுவதிகள் இருநாட்டு இணைப்பை விரும்புகையில்பழைய தலைமுறை ஏன் அதைவிரும்பவில்லை?

பதில்:தப்பானஅபிப்பிராயம்,பிழையான உணர்வு,கடந்தகால கசப்பான வரலாற்று உணர்வுகளை சீரணித்து மறக்கமுடியாத் தன்மை.பெரிசுகளிடம் இன்னும் உண்டு! அதனை சகலபெரியவர்களும், இளம் சமுதாயத்துக்காக மறக்கத்தான்வேண்டும்.

கேள்வி:வேறு ஏதாவது நீங்கள் சொல்வதற்கு விரும்புகிறீர்களா?

பதில்:ஒன்றைமட்டும் கூறவிரும்புகின்றேன். உங்களைப்போல் எங்கள் நாட்டில் அக்கறைகொண்டுள்ளநல்லமனிதர்களை,சந்திக்க விருப்பம் எப்போதும் உண்டு!

இவ்வாறுகூறி அவர் இல்லத்தில் எனக்காக ஏற்பாடு செய்திருந்த இராப்போசன விருந்தில்,திறமானவிருந்தும்,அளித்து,எனது விடுதிக்கு அன்றையதினம், இரவு சுமார் 11மணியளவில் அவரது காரில் அழைத்துவந்துவிட்டுவிட்டு,வணக்கம் கூறி விடைபெற்றார்.

எமதுநாட்டு மக்களும் இவர்களைப் போல்நல்லபண்புகளை என்றும்வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சகலரும் மனிதர்களே!என்ற அவரது வெளிநாட்டார் பற்றியகருத்தையும் சற்று மதித்து நடப்போமாக!

## சர்வதேசதமிழர்–குறிப்புகள்!

1995மார்கழியில் கொழும்புசென்ற எம் புதுடில்லி–இணைப்பாளர் கதிர்.சம்பத்குமார், இலங்கைதொழிலாளர்காங்கிரஸ்,எம்பியும், முன்னாள் இந்துகலாசார அமைச்சருமான பி.பி.தேவராஜ் அவர்களால் பொன்னாடை போர்த்துக்கௌரவிக்கப்பட்டார்.இவரது பேட்டியையும் தமிழர்களின் அபிமானத்துக்குரிய வீரகேசரி வெளியிட்டது. எமது கொழும்பு–இணைப்பாளர் கங்கைவேணியன்,இவரை விமானநிலையத்தில்,வரவேற்றுபலஇலக்கியஆர்வலர்கள்,இ.தொ.கா. எம்பி.ஆர்.யோகராஜன்,வீரகேசரிஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன்,வாரமலர்ஆசிரியர் பொன்.இராஜகோபால்,செய்திஆசிரியர்–செ. நடராஜா,மலையகசெய்திஆசிரியர்எஸ்.தேவராஜ்,மற்றும்,ஆசிரியபீடம் சகலரையும் சந்திக்கச்செய்தார்.சுமார் இருவாரம் பயனுள்ளசந்திப்புகளைத் தந்தது. எனக்கூறிய சம்பத்குமார் தமிழர்நிலை பற்றியும் நேரில்அறிந்தார். தகவல்:கங்கைவேணியன்

மலேசியநண்பன்பத்திரிகை, 10 பக்கமானாலும் அவ்வளவும் தேன்!என சர்வதேச தமிழர் பற்றி குறிப்பிட்டது.

ஐ.நா.குழந்தைகள் பாதுகாப்புச்சட்டமொழிபெயர்ப்பை அப்படியே வீரகேசரியும், பெரியார் பற்றிய ஆசிரியர்கருத்தை தமிழக சிந்தனையாளன்சஞ்சிகையும்,நோர்வேபெண் கலைஞர் பேட்டியையும்,உலகஅரங்கில் தமிழர் தாய்மொழி! கட்டுரையையும் ஜேர்மனி–பூவரசுசஞ்சிகையும்,தென்கிழக்காசிய பயணஅனுபவங்களில்– மலேசிய அனுபவங்களை மலேசிய–இதயம் இதழும் மீள்பிரசுரம்செய்தமை சர்வதேசதமிழருக்கு கிடைத்த அங்கீகாரம்! என்றே அடக்கத்துடன் கருதுகிறோம்!ஆதரவுக்குநன்றி!!

## ★ சர்வதேசதமிழர்.தகவல்சேவை ★

Stortinget
(The Parliament) (பாராளுமன்றம்)
Løvebakken
N-0026 Oslo
Tel. (+47) 22 31 30 50

The Public Information Centre
Møllergata 17 (பொதுதகவல் சேவை)
P.O.Box 8117, dep
N-0032 Oslo
Tel. (+47) 22 34 50 00

Central Bureau for Statistics
Skippergata 15 (புள்ளிவிபரம்)
P.O.Box 8131, dep
N-0033 Oslo
Tel. (+47) 22 86 45 00

Norges Bank (மத்தியவங்கி)
(The Central Bank of Norway)
Bankplassen 2
Postboks 1179, Sentrum
N-0107 Oslo
Tel. (+47) 22 31 60 00

Norges Eksportråd (ஏற்றுமதிச்சபை)
(Norwegian Export Council)
Drammesvn. 40
N-0255 Oslo
Tel. (+47) 22 92 63 00

Norges Rederiforbund
(Norwegian Shipowners' Association) (கப்பல் உரிமையாளர் சங்கம்)
Rådhusgt. 25
N-0158 Oslo
Tel. (+47) 22 41 60 80

NHO (வர்த்தக சங்கம்)
(Confederation of Norwegian Business and Industry)
Middelthunsgt. 27
N-0368 Oslo
Tel. (+47) 22 96 50 00

NUPI
(Norwegian Research Institute for Foreign Policy) (வெளிநாட்டு கொள்கை ஆய்வு நிலையம்)
Grønlandsleiret 25
N-0190 Oslo
Tel. (+47) 22 17 70 50

Fridtjof Nansen Instituttet
Fridtjof Nansens vei 17 (நான்சன் நிலையம்)
N-1324 Lysaker
Tel. (+47) 67 53 89 12

Den norske Bankforening
(Norwegian Bankers' Association) (வங்கியாளர் சங்கம்)
Dronning Mauds gate 15
N-0250 Oslo
Tel. (+47) 22 83 31 80

LO Landsorganisasjonen
(National Federation of Trade Unions) (தொழில் சங்கங்களின்)
Youngs gate 11
N-0181 Oslo
Tel. (+47) 22 03 10 50

Det norske Arbeiderparti
(The Labour Party)
Youngstorget 2 (தொழிற் கட்சி)
N-0181 Oslo
Tel. (+47) 22 42 91 40

Høyre (வலதுசாரி கட்சி)
(The Conservatives)
Høyres Hus
Stortingsgata 20
N-0161 Oslo
Tel. (+47) 22 42 94 20

Kristelig Folkeparti (கிறிஸ்தவ மக்கள் கட்சி)
(Christian Democrats)
Øvre Slottsgate 18
N-0157 Oslo
Tel. (+47) 22 41 11 80

Senterpartiet (மத்திய கட்சி)
(The Centre Party)
Peder Claussøns gate 2
N-0165 Oslo
Tel. (+47) 22 20 67 20

Sosialistisk Venstreparti
(Socialist Left Party)
Storgata 45 (சோஷலிச இடதுசாரி கட்சி)
N-0182 Oslo
Tel. (+47) 22 20 69 79

Fremskrittspartiet
(The Party of Progress)
Yougstorget 1 (முன்னேற்றக் கட்சி)
N-0181 Oslo
Tel. (+47) 22 41 07 69

Venstre (இடதுசாரிக்கட்சி)
(The Liberals)
Møllergata 16
N-0179 Oslo
Tel. (+47) 22 42 73 20

NRK Norsk Rikskringkasting
(Norwegian Broadcasting Corporation) (ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)
Bjørnstjerne Bjørnsons plass 1
N-0340 Oslo
Tel. (+47) 22 45 90 50

**Universitetet I Bergen**
5020 BERGEN
Telefonnummer: 55 31 14 10
Telefaksnummer: 55 32 04 45

**Universitetet I Oslo**
Pb 1072, Blindern
0316 OSLO
Telefonnummer: 22 85 50 50
Telefaksnummer: 22 85 44 59

**Universitetet I Tromsø**
Breivika
9037 TROMSØ
Telefonnummer: 77 64 40 00
Telefaksnummer: 77644900

**Universitetet I Trondheim, AVH**
7055 DRAGVOLL
Telefonnummer: 73596700
Telefaksnummer: 73598240

**Universitetet I Trondheim, med. fak.**
Medisinsk teknisk senter
7005 TRONDHEIM
Telefonnummer: 73598858
Telefaksnummer: 73598789

**Universitetet I Trondheim, NTH** (தொழில் நுட்ப பல்கலைக் கழகம்)
7034 TRONDHEIM
Telefonnummer: 73595280
Telefaksnummer: 73595237

**Norges musikkhøgskole**
Pb 5190, Majorstua
0302 OSLO (சங்கீதக்கல்லூரி)
Telefonnummer: 22 46 40 55
Telefaksnummer: 22 46 70 74

**Norges veterinærhøgskole**
Pb 8146, Dep. (மிருகவைத்திய)
0033 OSLO
Telefonnummer: 22 96 45 15/16
Telefaksnummer: 22 56 57 04

**Norges landbrukshøgskole**
Pb 5003 (விவசாய பல்கலைக் கழகம்)
1432 ÅS-NLH
Telefonnummer: 64 94 75 00
Telefaksnummer: 64 94 75 05

**Norges idrettshøgskole**
Pb 40, Kringsjå (விளையாட்டு)
0807 OSLO
Telefonnummer: 22 18 56 00
Telefaksnummer: 22 23 42 20

**Arkitekthøgskolen I Oslo**
Pb 6768, St. Olavs pl.
0130 OSLO (கட்டிடக்கலை)
Telefonnummer: 22 15 07 40
Telefaksnummer: 22 15 69 50

**Norges handelshøgskole**
Hellevn. 30 (வர்த்தகக் கல்லூரி)
5035 BERGEN
Telefonnummer: 55 95 92 00
Telefaksnummer: 55 95 95 65

**Statens balletthøgskole**
Tjuvholmen (பாலே நடன கல்லூரி)
0250 OSLO
Telefonnummer: 22 55 30 00
Telefaksnummer: 22 56 11 22

**Statens håndverks-og kunstindustriskole** (கைவினை கலைத்தொழில் கல்லூரி)
Ullevålsvn. 5
0165 OSLO
Telefonnummer: 22 20 12 35
Telefaksnummer: 22 11 14 96

**Statens høgskole for kunsthåndverk og design** (கலைக் கைத்தொழில் வடிவமைப்பு)
Strømgt. 1
5015 BERGEN
Telefonnummer: 55 31 22 14
Telefaksnummer: 55 95 95 65

**Statens teaterhøgskole**
Pb 1509, Vika (நாடகக் கல்லூரி)
0117 OSLO
Telefonnummer: 22 83 00 10
Telefaksnummer: 22 83 83 58

**Statens kunstakademi**
St. Olavsgt. 32 (கலைக் கல்லூரி)
0166 OSLO
Telefonnummer: 22 20 01 50
Telefaksnummer: 22 11 14 96

**Statens operahøgskole**
Tjuvholmen (ஒபரா கல்லூரி)
0250 OSLO
Telefonnummer: 22 83 23 77
Telefaksnummer: 22 83 70 19



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பனிப்பூக்கள் ....!

## 10

காரையூரான் இ. தியாகலிங்கம்.

வார்டோ - நோர்வே.

மணிபதினொன்றாகியும் வானில் நிலாவின் வெண்முகத்தை காணவில்லை. இருள்கௌவிய அந்தி வேளையாய் இருந்தாலும் குளிர்மாத்திரம் குறைவாகவே இருந்தது. இந்த இயற்கை ஜாலங்களையெல்லாம் ஈர்ப்புடலால் ரசிக்கமுடியாது, கவலை மேகங்கள் அவர்கள் மனதை மூடியிருந்தன.

அன்னமும் வேந்தனும் சொகுசு இரட்டைக்கட்டிலில் அலாம் மணிக்கூட்டையும் துணைக்கு வைத்துக் கொண்டு நீட்டி நிமிர்ந்து படுத்தாலும் மனங்கள் மாத்திரம் சஞ்சலத்தால் அல்லாடியது. வேந்தனைக் கவலை சிறைப்பிடித்ததால் அவன் கண்கள் முகட்டையே வெறித்துக் கொண்டிருந்தன. அவன் நினைவுகளெல்லாம் அனு என்னும் தலைவலியைச் சுற்றி வட்டமிட்டது. அன்னம் வேந்தனின் மார்பைத் தடவியவண்ணம் ஒரு சாய்வாய்ப் படுத்திருந்தாள். பின்பு தனது எண்ணத்தை மெதுவாக....

- என்ன செய்யிறது இவளை?
- ஒண்டுமாப் புரியல்ல.
- இப்பிடியே விட்டா முதல்ல இங்க இருக்கிறவங்களுக்குத் தெரிஞ்சா அவமானம். பிறகு ஊருக்கு தெரிஞ்சா அங்க அவங்க தலைகாட்டேலாது. இப்பிடிநாங்க உருக்குலைஞ்சு, கண்டவனையும் கண்டு தனிக்குறுகவேண்டி வந்திடும்.
- என்ன செய்யிறது அன்னம். நாலடி போட்டுத் தட்டிக்கிட்டி வைக்கலாமோ? இல்லை . அப்பிடி மீறி அடிச்சா பொலிஸ்ல கிலிசு எண்டு போனாலும் போவாள். அப்பிடிப் போயிட்டாள் எண்டா அவளைத் தனியாப் பிரிச்சே கொண்டு போயிடுவாங்க. பிறகு அவளைச் சொல்லவா வேணும்?ம்..........ஏலுமான அளவுக்கு அன்பா சொல்லிப்பாத்தாச்சு. தேவையில்லாம அவனத்தான் கட்டிப்பன் எண்டு முரண்டு பிடிக்கிறாள். வேறயாரையும் கொண்டு ஏதாவது புத்திமதி சொல்லுவிக்கலாம் எண்டா யாரை நம்பி புத்திமதி சொல்லச் சொல்லுறது. இங்க புத்தி சொல்லீட்டு ஊரெல்லாம் தம்பட்டம் அடிச்சுக் கொண்டு திரிவாங்கள்.
- வெட்டிப் போடோணும் இவள. அன்னம் ஆத்திரத்துடன் கூறினாள்.
- ஊரா இருந்திருந்தா இதை நான் உண்மையாவே செய்திருப்பன். ஆனா இங்க அந்தத் தைரியமும் இல்லாமல் போச்சு. மனமும் மாறிப் போச்சு. அவள் கேக்கிறதுகூட ஒருவிதத்தில நியாயமானதோ எண்டு படுகுது. ஆனா நாங்க வளர்ந்த வளர்ப்பால அத அப்பிடியே எத்துக்க முடியேல்ல. அனு சின்னப் பெண். அதோட அவள் சின்ன வயசில இங்க வந்ததால எல்லாத்தையும் அடியோட மறந்தமாதிரிக் கதைக்கிறாள். நாங்கதான் தப்பு செய்திட்டம் எண்டு நினைக்கிறன். இவள் சியாமிறிமாதிரி வளைஞ்சு குடுத்துப் போறவளும் இல்ல. தான் நினைச்சதைச் சாதிக்கோனும் எண்டு பிடிவாதமா நிக்கிறாள். இந்தப்பிரச்சனைய எப்பிடித் தீர்க்கிறதெண்டும் தெரியேல்ல. இப்படியே இதை யோசிச்சுக் கொண்டிருந்தா மூளை கலங்கினாலும் கலங்கிப் போயிடும் போல இருக்கு.
- வயசுவந்த பிள்ளையள இங்க வச்சிருக்கேலாது. பெடியள் கூத்தடிக்கிறதப் பாத்து இவளவையும் நடக்க நினைக்கிறாளையள். பெடியள் எப்பிடி நடந்தாலும் பெரிசு படுத்த மாட்டினம். ஆனா இவளவ நடந்தா கண்டவன் போனவன் எல்லாம் கைகொட்டி சிரிப்பாங்கள். சீ நாங்க இஞ்ச வந்ததே தப்பு. அன்னம் சலித்துக் கொண்டாள்.
- பிள்ளையளின்ர படிப்பையும் உயிருக்குப் பாதுகாப்பையும் எண்ணித்தான் இஞ்ச கூப்பிட்டனான். ஆனா இப்ப படிப்பும் உயிரும் மிச்சமா இருக்க மானம் கப்பலேறப்போகுது போல இருக்கு.
- அப்ப என்னதான் செய்யப் போறியள்.
- புரியல்ல. நான் செய்தது புரியல்ல. செய்யிறது புரியல்ல . செய்யப் போறது புரியல்ல. புரிஞ்சவனுக்கு பிரச்சனையேது? எனக்கு புரியல்ல. குடும்பத்த எப்பிடிக் கொண்டு நடத்தேனும். பிரச்சன எப்பிடி வரும் , எப்பிடிச் சமாளிக்கோனும் , எதுவுமே புரியேல்ல.
- இப்பிடியே வேதாந்தம் பேசினா என்ன அர்த்தம். ஏதாவது சட்டுப்புட்டெண்டு செய்தாகோனும். இவளால எங்கட குடும்பமானம் குலையக்கூடாது.
- அதுவிழங்கி இருந்தா நான் எப்பவோ தீர்த்து வைச்சிருப்பன். ம்..... அவள என்ன செய்யிறது? எப்பிடித் தடுக்கிறது? ஒரு பெடியனக் கொண்டுவந்து அந்த பெடியன விட்டிட்டு இவனக்கட்டிக்க எண்டா அவள் எங்கட சொல்லா கேக்கப் போறாள்? அவள் தான் நினைச்சதைத்தான் செய்வாள். இந்த நாட்டில அதைத்தடுக்க எங்களுக்கு நாதியில்ல. முடியாமல் போனா என்ன செய்யிறது? முடியாட்டி விட்டிட்டு தன்ர தன்ர வழியப் பாத்துக்கொண்டு போக விடவேண்டியதுதான்.

வேந்தனின் பேச்சை கேட்கும் போது , அன்னத்திற்கு எரிச்சல் வந்தது. "இவர் என்ன கதைக்கிறார்? இப்பிடியே விட்டு விடுவதா? இல்லை . ஒருபோதும் இல்லை. அப்படிஎன்றால் என்ன செய்வது?" அன்னத்தின் மூளை கசங்கத் தொடங்கிச் சில நிமிடங்களில் ஒருவிடை கிடைத்திருக்க வேண்டும்.

- உங்களால முடியாதா?
- இல்ல.
- அப்ப நான் ஒண்டு சொன்னாக் கேப்பீங்களா?
- என்ன?
- நான் சிலோனுக்கு திரும்பிப்போறன். யாழ்பாணம் போனாத்தானே பிரச்சன. நான் அங்க போகம கொழும்பில வைச்சு இவளைப் படிப்பிக்கிறன் . அங்க அவ்வளவு ஆபத்து இருக்குமெண்டு நான் நினைக்கேல்ல.
- இது நல்ல யோசினைதான். நீ வேணும் எண்டா அனுவ மாத்திரம் கூட்டிக்கொண்டு போ. மற்றவளவ பிரச்சன இல்லாதவளவ. நான் பாத்துக்கிறன் . இஞ்ச இருந்தா எவ்வளவோ உதவியெல்லாம் கிடைக்கும். சிலோனில என்ன உதவி கிடைக்கப் போகுது? இல்ல அங்க படிச்சு ஒரு உத்தியோகம் கிடைச்சும் என்னத்த சம்பாதிக்க முடியும்? நீ அனுவ கூட்டிட்டு போ. போய் உன்ர தம்பி வீட்டிலவிட்டிடு. கொழும்பில லேசில இப்ப பிரச்சன வராது. வந்தாலும் இவங்க கட்டடத்துக்குள்ள சிங்கள ஆக்கள் நிச்சியம் காப்பாத்துவாங்க. இன்னும் ஒருக்கா புத்திமதி சொல்லி அவள் கேக்கேலையெண்டா அடுத்தது நீ சொன்னமாதிரி செய்வம். அனுவும் எங்கட சொல் கேட்டு இங்க இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும். சீ..........ம்... அதுக்கு நாங்க குடுத்து வைக்கேல்ல.

இப்போது வெளியே காற்று இல்லை. இருளும் குறைவாய் இருந்தது. இருளை வெற்றி கொண்டு கொண்டிருந்தாள் பூமிமகள். அவள் பெயர் நிலவு. அமைதி ! எங்கும் அமைதி. வேந்தனினதும் அன்னத்தினதும் மனதிலும் இப்போது அமைதி குடியேறியிருந்தது. மனஅமைதி கிடைக்கும் போது கண்கள் நித்திரையிடம் சிறைப்பட்டுக் கொள்வதைத் தவிர்க்க முடியாது. வேந்தனையும் அன்னத்தையும் உறக்கம் இறுக்கத் தழுவிக் கொண்டது. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்! என்னும் பழமொழியைச் சோதிக்க எண்ணிய வேந்தனால் எய்யப்பட்ட அம்பானாள் சியாமிறி. தாங்கள் எடுத்த முடிவைச் சியாமிறியிடம் கூறி இருந்தாலும் , அவற்றை அனுவிடம் கூறவேண்டாமெனவும் , வழமையான முறையில் மிகவும் அன்பாய் புத்திமதி கூறுமாறும் பணித்தனர். முதலில் ஆம் எனத் தலையை ஆட்டிய சியாமிறிக்கு பின்பு தான் செய்ய வேண்டிய காரியத்தை எண்ணும் போது மலைப்பு உண்டாகியது. என்னால் இது இயலுமா என்னும் கேள்வி அவளுக்குப் பயம் காட்டியது. சிந்தித்துச் சிந்தித்து கடைசியில் குழப்பம் என்னும் குட்டைக்குள்தான் அவளால் விழமுடிந்ததே தவிர எந்தமுடிவும், எந்தத் துணிவும் , அவள் மனதில் வரவில்லை.

சியாமிறியின் எண்ணப்பறவைகள் தொடர்ந்தும் சிறகடித்தன. காதல் என்கின்ற இயற்கையான உணர்ச்சியை ஒவ்வோர் மனிதனும் அனுபவிக்க உரிமை இருந்தும் அதற்கு இவ்வுலகில் அற்பத்தனமான மனிதனால் தடைவிதிக்கப்பட்டால் அந்த மென்மையான உணர்ச்சி உள்ள மனிதனால்தான் தாங்கிக் கொள்ளமுடியும்? அனுவின் காதலை இவ்விதத்தில் நோக்கினால் எப்படி அவளது காதல் தப்பானதாகும்? எங்களைப் பொறுத்தளவில் இதைத் தப்பென்பதா? அல்லது சரியென்பதா?

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம் யுனெஸ்கோ.பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கதலித்தது என்னைப் பொறுத்தமட்டில் நியாயமானதாய் பட்டாலும் . இவள் ஏன் எங்களுக்கு எந்தவிதத்திலும் பொருந்தாத ஒருவனைக் காதலிக்க வேண்டும்.? நான் எப்படி அவனைப் பொருந்தாதவன் எனக் கூறமுடியும்? முக்கிய பொருத்தமாகிய மனப்பொருத்தம் இருந்ததால்தானே அவர்கள் காதலித்தார்கள். அப்படியென்றால் அனுவின் காதல் நிஜமானதா? நிஜமானால் நிஜமான ஒன்றை எப்படித் தப்பு எனக்கூறமுடியும்.

சீ இது என்ன அசட்டுத்தனம்? நாங்கள் ஆச்சாரத்தை ஐயர்மாருக்கு அடுத்ததாக கடைப்பிடிக்கும் உயர் குலமல்லவோ? அப்படிப்பட்ட குலத்தில் பிறந்துவிட்டு நாமெப்படி முறைகெட்டு நடப்பது? நமக்கு இன்னதுதான் நியதி என்றிருக்கும் போது அதையெப்படி மீறுவது? அதைமீறுவோமானால் நமக்கும் விலங்களுக்கும் என்ன வித்தியாசத்தைக் கூறிவிட முடியும்.? ஆடுகள்போல் மாடுகள்போல் அம்மா அப்பா வித்தியாசமே தெரியாமல் இருந்தால்? சீ எவ்வளவு அனாகரீகமான ஆபாசமான முறைகள் அவை. மனிதன் மனிதனாய் உரிய ஆஸ்தான அனுஷ்டானங்களை கடைப்பிடித்து வாழவேண்டும். இல்லையேல் மனிதன் என அவனை எப்படி அழைத்துப் பெருமைப்பட முடியும்? அப்படியென்றால் அனு செய்வது தப்புத்தானே? ஆம் . தப்புத்தான். ஆசை இருந்தாலும் அதை அடக்கத் தெரிந்தவன்தான் மனிதன். மிருகத்திற்கும் மனிதனுக்கும் உள்ள முக்கியவேறுபாடே ஆசையையும் உணர்ச்சியையும் அடக்கத் தெரிந்திருப்பதுதான். ஆசையின்படியே நடப்பதுதான் மிருகம். அப்படியென்றால் அனுவின் நிலையை நீ கடைப்பிடிப்பாயா? அவள் மிருகத்திற்கு ஒப்பா? கீதையின் உபதேசத்தின்படி நான் நடப்பது மனிதன் என்கின்ற பெருமையைக் காக்குமா? உண்மை எது? சரியானது எது? கீதை உண்மையானதா ? அல்லது அனுவின் பாதை உண்மையானதா? பொரும்பாண்மை மனிதர்கள் நம்புவதை உண்மையாய் எடுத்துக் கொண்டு நான் அனுவிற்குப் புத்திமதி சொல்வது நியாயமானதா? ஆம். அதுதான் நியாயம்.

ஊரோடு ஒத்தோட வேண்டியதுதான். அதுதான் எனக்கும் அனுவிற்கும் எங்கள் குடும்பத்திற்கும் சாலச் சிறந்ததாய் இருக்கும். சியாமிழி மனதிற்குள் முடிவு செய்து கொண்டாள்.

அனுவின் நிலையோ மற்றவரைக் கேட்டோடவேண்டியதாய் இருந்தும் அவள் யார்சொற்கும் பணியாது முரண்டு பிடித்துக் கொண்டிருந்தாள். அவளைக் கேட்டோடப்பண்ணி மனிதனாக்கி காட்டவேண்டும்என எண்ணியவண்ணம் சந்தர்ப்பம் பார்த்துக் க்ாத்திருந்தாள்.

மாலைவேளையாக இருந்தும் இரவுபோன்று இருட்டு ஆட்சிசெய்தது. அதைவிரட்டுவதற்காய்த் தெருவிளக்குகள் போராடிக் கொண்டிருந்தன. அதன் ஓரளவு வெற்றியால் சியாமிழியின் கண்களுக்குள் எதிர்வீடும் அங்கு நடக்கும் சம்பவங்களும் அடைக்கலமாகி இருந்தன. எதிர்வீட்டில் ஒரு தாய்நாயையும் அதன்குட்டியையும் வளர்த்து வருவது இவளுக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்று. இப்போது அந்தக் குட்டிநாய் நன்கு வளர்ந்துவிட்டது. நாய்கள் காலாற ஓடிவிளையாடுவதற்காய் நாய்களை அவிட்டுவிட்ட பின்பு அவைபோகும் திசையில் அவர்களும் நடக்கத் தொடங்கினர்கள்.

சியாமிழியின் இந்த வேடிக்கைப்பார்வை அனுவையும் ஈர்க்க "என்னக்கா பாக்கிறா" என்றவண்ணம் அவளுடன் சேர்ந்து கொண்டாள். சியாமிழி மௌனமாகவே அந்த வாயில்லா ஜீவன்களைப் பார்த்துக் கொண்டு நின்றாள். நாய்குணம் என்பதின் அர்த்தம் இதுவரை சியாமிழிக்குத் தெரிந்திருந்ததில்லை. ஆனால் அந்தக் குட்டிநாய் திடீர்எனத் தாய்நாய்மீது பாய்ந்து புணரஎத்தனிக்கும் போதுதான் அந்தச் சொற்களில் பொதிந்திருந்த முழுமையான அர்த்தமும் புரிந்தது. சியாமிழியின் பார்வை இப்போது அனுவின் பார்வையைச் சோதிக்க அதில் சிறிது அருவெறுப்பு தெறிப்பதை அவதானித்துக் கொண்டாள்.

நாய்கள் நின்று புணரவில்லை. அவையோடி யோடி இவர்கள் கண்ணைவிட்டு இருட்டில் காணாமல்போய் விட்டன. சியாமிழியின் மனதில் இக்காட்சி மறையவில்லை . எனினும் எதற்கோ அலுத்துக் கொண்டாள்.

- ச்...................இதைப்போய் பாத்துக் கொண்டு நிக்கிறம்.
- ஏன் பாத்தா என்ன?

சியாமிழி மௌனம் சாதிக்க அனு தான் அப்படிக் கேட்டது தவறானதோ எனச் சிந்தித்தாள். பின்பு சியாமிழியே.

- அது தாயும் குட்டியும் எண்டு உனக்குத் தெரியாதே?
- உண்மைதான். ஆனா அதுகளுக்கு ஐஞ்சறிவுதானே?
- உண்மை அனு. நீ சொல்லுறது உண்மை. ஐஞ்சறிவு படைச்ச அதுகளின்ர வாழ்க்கைக்கும் ஆறறிவுபடைச்ச மனிதன்ர வாழ்கைக்கும் நிறைய வித்தியாசம் உண்டுதான். மனிதனுக்கிருக்கிற ஆறறிவாலதான் அவன் சிந்திச்சு சில கட்டுப்பாடுகள ஏற்று . உணர்ச்சியக் கட்டுப்படுத்தி நடக்கிறான். ஆனா மனிசனும் சிலவேள ஆறவது அறிவ பயன்படுத்தாம விட்டிர்றான் . அப்ப அந்த ஐஞ்சறிவு படைச்ச மிருகமும் மனிசனும் ஒண்டாகின்றான்.

சியாமிழி சுற்றிச் சுற்றி எங்கு வருகிறாள் என்பதை அனு புரிந்து கொண்டாலும் அனு தொடர்ந்தும் அமைதி காத்து வந்தாள்.

- நாயப்பொறுத்தளவில அந்தச் செய்கை பிழையானதா அல்லது சரியானதா எண்டெல்லாம் சிந்திக்கப் போறேல்ல. அதனாலதான் அதை மிருகம் எண்டுறம். ஆனா இதே நீட்முறைய மனிசன் செய்திடேலாது. அதுதான் மனிசனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாடு. அதைப்போலத்தான் மனிச சமுதாயத்துக்கு , சமுதாயம் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் மாறுபடுகுது. எங்களுக்க இருக்கிற கட்டுப்பாடும் பண்பாடும் நோஸ்களுக்கு இருக்குமெண்டு சொல்லேலாது. ஒருகணவனோட அல்லது ஒருமனைவியோட வாழேணும் எண்டது எங்கட தனித்தன்மையான கட்டுப்பாடு. ஆனா அந்த தனித்தன்மைய உன்னால காப்பாற்ற முடியுமா? ஸ்தீக்க கட்டினா அது சாத்தியமா? வாதாட்டத்துக்கு ஏலும்எண்டு வாதாடலாம் . ஆனா நடைமுறையில காலப்போக்கில அது சாத்தியப்படுமா? அனு உன்ர தனித்தன்மையையும் காப்பாற்றி எங்கட தனித்தன்மையான குலப் பெருமையையும் காப்பாற்ற விரும்பினா தயவு செய்து ஸ்தீக்க மறந்திடு. பலபேருக்காக ஒருதியாகம் செய்யிறது பெருமையான விசயம். உனக்கேதெரியும் நீ இப்பிடிச் செய்யிறதால என்னென்ன விளைவுகளெல்லாம் ஏற்படும் எண்டு. பிளீஸ் அனு அவன அடியோட மறந்திடு.

அனுவின்பார்வை "லேசராய்" சியாமிழிமீது விழ , குரல் துப்பாக்கியாய் வெடித்தது.

- இதுக்குத்தான் இப்பிடிச் சுத்தி வளைச்சியா? இது நீ யார்செல்லிவிட்டு எனக்குவந்து ஓதுறாஎண்டு தெரியும்.
- அனு நீ இப்பிடி அடம்பிடிக்கிறது செரியில்ல.
- யாரடம்பிடிக்கிறது? நானா ? இல்லாட்டி நீங்களா? உலகத்தில நடக்காத ஒண்டையா நான் செய்திட்டன்.?
- எங்கயடி நடக்குது இப்பிடி?
- ஏன் உனக்கு ஒஸ்லோவில என்ன நடக்குதெண்டே தெரியாதோ?
- அவங்கள எங்களோட ஒப்பிடாத. நாங்க எப்பிடிப்பட்ட குடும்பம் எண்டு உனக்கு விழங்காதோ?
- அவங்களப் போல நான் டிஸ்கோவுக்கு அலையேல்ல. ஒருநாளைக்கு ஒருத்தனோட சுத்தேல்ல. நான் மட்டுமல்ல ஸ்தீக்கும் என்னப்போலதான். நாங்களும் பண்பான மனிசனுக்குத் தேவையான எல்லாக் கட்டுப்பாட்டோடும்தான் வாழப்போறம். இதுக்காக நீ அதிகமா அலட்டிக்காத.

சியாமிழிக்கு எரிச்சல் மண்டியது. இவளிற்கு எதைக்கூறினாலும் கடைசியில் அது பிரியோசனமற்றுப் போய்விடுகிறது. ஏன் இவள் இப்படி முரண்டு பிடிக்கிறாள்? அப்படி என்னதான் இருக்கிறது அவனில்? புரியவில்லை. புரியாவிட்டாலும் எழுந்து நாலு மொத்து மொத்த வேண்டும் போலத் தோன்றியது. அதுவும் முடியாது. முடிந்திருந்தால் அப்பா எப்போதோ திவசம் செய்திருப்பார். பின்பு திடீரெனக் கோபம் தலைக்கேற

- எங்களையெல்லாம் சாகடிச்சிட்டு நீவாழப் போறியா?
- ம்...........சிரித்தாள் அனு. பின்... (தொடரும்)

சர்வதேசதமிழர்,தொடர்ந்துவர,உங்கள்சந்தா,நிதிஉதவி உதவும்!நோர்வேதமிழர்களில் சிலர் சந்தாஅனுப்பும்போது தமதுபெயர்,முகவரியை போஸ்ட்சீரோவில் எழுதமறந்துவிட்டீர்கள்!
தயவுசெய்து(பணம்செலுத்தியதிகதியுடன்)உடன்தொடர்புறுக!

www.tamilarangam.net



இளைஞர் ஈழ தமிழருக்கு தன் ஆதரவை; உயிர் தியாகம் தீக்குளித்து தெரிவித்தான். அவன் செய்தது தமிழ்நாட்டில் சென்னையில் தெற்காசிய விளையாட்டில் விளையாட வரும் சிங்களவர்களை திரும்பிபோக சொல்லி! முதல் நாள் திருச்சி மாவட்டத்தின் மூலமாக பிரிந்த திருவள்ளுவர் மாவட்டம் பொறுப்பாளரிடம் மனுமூலமாக தெரிவித்தான். ஆனால் அரசாங்கமோ இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் தலை நிமிர செய்ய; இந்த தமிழனின் கோரிக்கை கிணற்றில் போட்டகல்லாக இருந்தது.

ஆனால் அரசாங்கமோ தமிழன் ரத்தத்தை குடித்த சிங்களனுக்கு சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்பு கொடுத்து மரியாதை தந்து கௌரவித்தது இதை கண்டு கொதிப்படைந்தார் அந்த அப்துல் ர:.வுப் என்ற இளைஞன்! டிசம்பர் 15ம் தேதி முடிவெடுத்தான். அன்று காலை எழுந்து தன் இறைவனை வணங்கி தொழுதான். தன் தாயிடம் காலை உணவை உட்கொண்டான். முதல் நாள் வாங்கி வைத்திருந்த 5 லிட்டர் கெரசின் (மண்ணெண்ணெய்) எடுத்து கொண்டு தான் நடத்தி வந்த பெரம்பலூர் லண்டன் கம்ப்யூட்டர் சென்டருக்கு வந்து முதல் நாள் இரவில் தான் கைப்பட எழுதிய துண்டு பிரசுரங்கள், "ஈழதமிழருக்கு போராடுங்கள்! அவர்களை காப்பாற்ற நம் தமிழ்நாட்டில் அனைவரும் இந்து, முஸ்லீம் கிறிஸ்துவன் என்று ஒன்று சேருங்கள்!" என்று எழுதினான். தன் கையெழுத்தில் தமிழனுக்கு அபாயம்! உலகமே காப்பாற்று! அப்துல் ர:.வுப் என  மண்டை ஓடு குறியோடு எழுதி மக்களுக்கு கொடுக்கப்பட்டது. பிறகு அது போலிசாரால் கைப்பற்றப்பட்டது. அப்துல் ர:.வுப் உள்ளே சென்று போர்வையில் 5 லிட்டர் கெரசினை ஊற்றி நனைய செய்து தன் உடல் முழுவதும் போர்த்தி கம்ப்யூட்டர் சென்டர் வெளியே வந்து தீ சுவாலை பற்ற வைத்து; ஈழதமிழரை காப்பாற்று! இந்தியாவே தமிழனை கொலை செய்ய இலங்கைக்கு உதவாதே! என்ற கோஷத்தோடு ரோட்டில் ஓடுகிறார். போலீசார் தீயை அணைத்து அவர்களின் தந்தையிடம் தெரிவிக்கும்போது அப்துல், "ஆத்தா! நான் போனால் அண்ணன் இருக்கான். ஆனால் ஈழதமிழனுக்கு போராட தந்தையை அண்ணனை, இழந்த மக்களுக்கு யார் ஆறுதல் சொல்வார்கள்." "ஆத்தா நான் பிறப்பால் முஸ்லீம்! ஆனால் மொழியால் தமிழன்!" என்று சொல்லி உயிர் விடுகிறான். ஆனால் இதை தாங்கள் அரசியல் லாபத்துக்கு பயன்படுத்த கட்சிகள் நினைத்தன. ஆனால் முஸ்லீம் இனத்தவரோ, "எம் மகன் பணத்துக்கோ, விளம்பரத்துக்கோ செய்யவில்லை! ஈழதமிழன்; எமக்கும் ரத்தம் ஒன்றுதான்!" "எமது துயரும் அவர்கள் துயரும் ஒன்றுதான்! தான் எப்படி தீ சூழலில் சித்ரவதை; வேதனை அடைந்தனோ! இதேபோல் சிங்களவர்களின் இனவெறியாலும், குண்டுமழையாலும், கற்பழிப்பாலும் எம் தமிழ் மக்கள் படும் வேதனையை இவ்வுலகம் எங்கும் தெரிவிக்கவும் செய்தான், எம் மகன்! என்று சொல்லிவிட்டார்! அந்த அரசியல் தலைவர்களின் சாயம் வெளுத்தது.

—ஜான். ராஜ்தேவர்.

www.tamilarangam.net

## சர்வதேச தமிழர் கவியரங்கம்

### சமத்துவம் கண்ட சாலை!

சிங்கங்கள் துப்பும் குருட்டுக்குண்டுகள்!
தின்று தீர்க்கும் சமத்துவமாய்!
மரம்,செடி என்ன?
வீடு,வாசல் என்ன?
கண்கெட்ட குண்டுக்கு
குழந்தையா? குமரியா?
எல்லாமே சமத்துவம் தான்
சாவகச்சேரி சாலையில்!

தங்கநகையால் ஆடைபோடும்
தங்கம்மாவும்!
தண்டித்தின்னும்
தாயம்மாவும்!
வயிறொட்டி வதங்கியும்
வாழத்துடிக்கும் கண்ணம்மாவும்!
யாழ்ப்பாணத்தை விட்டு
தம்உயிரைக் காக்க
ஊர்வலம் போயினர்!
சாவகச்சேரி சாலையில்
சமத்துவமாக!
வீட்டு மிருகங்களும் போயின
சோழர் பரம்பரை நாமென்றே!

சிவனே!யேசுவே!எனப்பல குரல்கள்!
அல்லா!என்றோர் குரல் கேட்கவேயில்லை!
அவர்களைத்தான் ஏற்கனவே
அனுப்பியாச்சே!
தொழிலாளர்,தோழனின் சமத்துவம் வழிய
தூக்கிக்கொண்டோடினர்!
டாக்டர் சொன்னார், சமத்துவம்
உடனே தேவையென்று!
ஏழை,எளியவர் வரிசையில் நின்று
வழங்கினார் சமத்துவம்!
சாதி,சமய பேதமின்றி அந்த சமத்துவம்,
யார் யார் உடலிலோ!எங்கெங்கோ!
பொன்னன் வீட்டில் கள்ளடி!
வைத்தியர் வீட்டில் பொல்லடி!
அது அந்தக்காலம்!!
இன்றோ, சாவகச்சேரியில்..........
யாழ்ப்பாணச் செட்டியும்
பொன்னன் கொட்டிலில் தான் சீவியம்!
எல்லாம் போரால் வந்த சமத்துவம்!

தி.திலீபன் – ஒஸ்லோ

### கெட்டிக்காரன்!

தமிழ் ஈழத்தின் துயரைக்கண்டு
தமிழகமே கடையடைத்தது – ஆனால்
தமிழருக்கு எதிராய்ப் பேசும் – என்
வாயைக்கூட அடைத்திடாத
நான் ஒரு கெட்டிக்காரன்!
உலகிலுள்ள தமிழர் ஒன்றாய் – தமிழ்
ஈழத்திற்காய் குரல் கொடுக்க
தனியனாக எதிர்த்து நிற்கும்
நான் மட்டும் கெட்டிக்காரன்!
அன்னையவள் ஈழத்திலே
ஆகார மின்றி வாடும்வேளை – என்
அன்புக் குழந்தை பிறந்த நாளை
ஆடம்பரமாக கொண்டாடிடும்
நான் ஒரு கெட்டிக்காரன்!
ஐந்து லட்சம் தமிழர் ஈழத்தில்
உணவுக்காக வாடும்வேளை – என்
ஐம்பதாவது பிறந்தநாளை
கோலாகலமாக கொண்டாடிய
நானும் ஒரு கெட்டிக்காரன்!
பார் முழுதும் தமிழர் நடத்திய
ஊர் வலத்திற்குப் போகாவிடினும் – தமிழ்
"சினிமா" பார்க்க முண்டியடித்தோடும்
நானும் ஒரு கெட்டிக்காரன்!
இந்தியனாகப் பிறந்து தமிழ்
ஈழத்திற்காய் தீயிலே குளித்த – அந்த
இந்தியத் தமிழ் அன்பரைவிட
ஈழத்திலே பிறந்து மேலைநாட்டில் – தினம்
இடைவிடாது மதுவிலே குளிக்கும்
நான் ஒரு கெட்டிக்காரன்!
அகதிகள் நிதியிங்கு சேர்க்க வந்தோரை
அறுநூறு கேள்விகள் மடக்கியே கேட்டு
அகதிக்கு ஆதாரக் கடிதங்கள் கேட்ட
நானும் மிகமிக கெட்டிக்காரன்!
பத்திரிகை தன்னிலே என்பெயர் வந்திட
பிறந்த நாட்டினைக் கொச்சைப்படுத்தி – பிற
நாட்டவர் மத்தியில் நல்லபேர் வாங்கிய
நான் மகா கெட்டிக்காரன்!

ஆக்கம்
போன். சிவா
எகர்சுண்ட், நோர்வே.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே — அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

— ஔவையார்

### உலகத்தாயின் கண்ணீர்!

மதத்தின் பெயரால் மோதியது போதும்,
மதியின் பயனால் இனிதே இணைவோம்!
மதத்தை பார்க்காதீர்!மனத்தைப்பாருங்கள்!
மனிதநேயத்தை மனதினில் ஏற்றுங்கள்!
கடவுள்எதுவானாலும் கண்ணியம் காக்க,
மதம் எதுவானாலும் மனிதனைக் காக்க!
சேதந்தரும் சோகத்திற்கு முடிவுஎழுதுக!
மனிதஇன முன்னேற்றத்துக்கு முனைக!
விலைமதிப்பற்றது மனிதஉயிர்கள்,
விலைபோகலாமா? மதச்சண்டைகளுக்காக!
ஆயுதம் ஏந்துவது அழிவுக்கே வழி!
அன்பை,அறிவை அமைதிக்கு பாவி!
மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும்,
மோதலைவிடுத்து யோசிக்கவேண்டும்!
உணர்ச்சி வசப்பட்டு உதிரம் இழவாது,
அறிவால் உணர்ந்து மகிழ்வுடன் வாழு!
உலகத்தாயின் கண்ணில் வழிவது
கண்ணீரன்று!
புதல்வர்களின் சண்டை கண்டு
செந்நீர் இன்று!!

மதுரை இரா.இரவி – இந்தியா

### விதவையின் வெண்புறா!

வெண்மை புனிதமென்றனர்!இன்றவர்
விதவையின் சின்னமென்றனர்!அன்றவர்
சொல்லில் குற்றமில்லை,
செயலில் குற்றமுண்டு! – ஆம்
சமாதானநிலையில்
வெண்புறா
விதவையாய்ப் பறக்கும்,
கண்டுகளிக்க மனித
உயிர்கள் தான் இராது.......!

கோட்டைக்குப்பம்
முகமது கவுஸ் – குவைத்

### மண்ணுள் போகும் வரை........!

வெற்றி எனக்கு!தோல்வி காணும்வரை!
ஆடம்பரம்எனக்கு!செல்வம் உள்ளவரை!
வாழ்க்கைஎனக்கு!மரணம் தழுவும்வரை!
கொள்கை எனக்கு!ஆட்சி வரும்வரை!
நட்பு எனக்கு!நன்றியுள்ள வரை!
தமிழ் எனக்கு!மண்ணுள் போகும்வரை!

புதுச்சேரி ச.வேல்முருகன்

### இப்படியும் மனிதர்கள்!

வீதியில் வெயிலின் கொடுரம் – அங்கு
அமர்ந்திருக்கும் விழியற்ற மனிதர்
அம்மா!தருமம்!! எனும் அவர்குரல்
சதம்சதமாய் சேகரிக்கும் நாலுபணம்!
அந்தப்பணத்தையே கஷ்டமின்றி
ஏப்பமிடும் திமிர் வாலிபன்!

ஏ.யு.எல்.ஏ.கில்மி – தென் கொரியா

### அகிம்சை ஒன்றே வெல்லும்!

விடிவை நோக்கிச்
செல்வோம் என்று,
முடிவை நோக்கிச்
செல்லும் மனிதா!
இது இனிதா?
வேண்டாம் குருதிமீது
இறுதியாத்திரை!
உறுதிமீது அன்பு
யாத்திரை செய்வோம்!
துப்பாக்கித்துளையினிலே
பிழையில்லை!
அதைஇயக்கும் அறிவில்தான்
அன்பில்லை!
தடுக்கிவிழுந்தால் கண்ணிவெடியில்!
மனிதகுலமே இன்று காலன் பிடியில்!
முன்பு மனிதன் வெடி,வெடித்தான்! – பின்பு
மனிதனே வெடிகுண்டானான்!
சிறகை விலைகொடுத்து பறவைகள்
சுதந்திரம் கேட்காது!
கண்ணிரண்டும் விற்று சித்திரம்
கேட்பது முறையாமோ?
சுதந்திரம் உணர்வுகளுக்குத்தானே!
உடலை விட்டுஉயிருக்கல்லவே!
வன்முறை செயல்முறையானால்
வரைமுறையற்ற தலைமுறை வளரும்!
கலவரத்தோடுதான் சமூகத்தின் சமவரமோ
உலகில் என்றுதான் சுயம்புவருமோ?
புத்தம் சரணம் கச்சாமி!அன்று!
யுத்தம் மரணம் கச்சாமி! இன்று!
இது மாறுவதும் என்று?
பல்லுக்கு பல் அன்று!
பண்பட்ட சொல் ஒன்றே,
புண்பட்ட மனிதகுலத்தை
மென்பட்டு போலாக்கும்!
வன்முறை அல்ல சுதந்திரம்!
அகிம்சை ஒன்றே நிரந்தரம்!!

மணப்பாடு ஆர்.முத்துக்குமார்



Subscription/yr/6 issues:: Scandinavia:90,-NKr;Srilanka/India:6USD;U.K.:6£;France:30Fr;Germany:12DM;
Canada:10CD;Swiss:12Fr;Australia:12AD;K.S.A.:20SR;Singapore/Malaysia:12SD;Others::10 USD
Postgiro:0823 0899 453 ,Postbanken,0021 Oslo Bankgiro:6066 1012 199,kredit kassen bank,3000 Drammen

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SSN:0805-7443 15,-Nkr

SARVADESA TAMILER
# C-BLAD

Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet.

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

## கிளியின் விடுதலைப்பா!

காட்டில்சுதந்திரப்பட்சி நானும்
—இன்று
வீட்டில் அடைபட்டு வாடுகிறேன்!
ரட்டில் கிளியென எனைவரைந்தே
—இந்த
ன உலகும் நன்கு மதித்திடுமே!
ஊட்டிவளர்த்த அன்னை இல்லை,
—அவள்
கூட்டில்அடைபட்டு சிறையானாள்!
காட்டில் சுதந்திரபட்சியாக—நான்
பறந்தடிக்கவேண்டும்,சுதந்திரமாய்!
சிட்டுக்குருவிபோல்பறந்தடிக்க,ஐயா
நம்பிட்டேன் எனக்கு,விடுதலைதா!
அருட்கவி.வேலணைவேணியன்

---

## புத்தாண்டே வாழி!

த்தாண்டில் புதுமணமும் கமழட்டும்
பித்தானபயிர்வகைகள் செழிக்கட்டும்
த்தான பண்டமுமே மலியட்டும்
புத்தான முல்லைமலர் மலரட்டும்!

கைநீங்கி பூசல்கள் ஒழியட்டும்
பகைவகையாய் வர்த்தகமும் வளரட்டும்
கையெங்கும் கருங்கூந்தல் அழகூட்ட
கையாக பொலிவெங்கும் திகழட்டும்!

துமணத்துசோடிகளும் இணையட்டும்
துவரக்கன் மண்ணிலே மடியட்டும்
துமையாய் ஆராய்வு பிறக்கட்டும்
புதுமைக்கு முன்னுரிமை வழங்கட்டும்!

நல்லரசும் உலகெங்கும் அழிவைநீக்கி
நல்லரசாய் நல்லுள்ளம் நலமே நாடி
மைகொட்டா இன்பமுமே இனிதேகாண
அமைதிக்கேவாழ்வெங்கும் அமையட்டும்!

சங்காவி மாக்கோலம் தோரணமும்
ங்காவிளக்கொளியும் மனையெங்கும்
ங்காகப்பாரெங்கும் பறைசாற்றி
பாங்காதா.தமிழ்பூவைமனம் புத்தாண்டில்!
ன்.ஆர்.இலட்சுமணன்,கைதராபாத்

---

## பட்டக்களப்பே வாழி!

ட்டுத்திசையும் ஏகப்புகழ்பெற்ற
ட்டுகுலையா கண்ணகியை,தெய்வமென
நாட்டுத்தொழுகின்ற தூயவளநாடாம்
ட்டுநகரும் சார்ந்த ஈழவளநாடும்!

காட்டும்மழையும், குறையாக்குளங்களும்
ட்டுமேனியர்க்குப் பாங்கானவாழ்வளிக்கும்
ட்ட நெடுங்கடலும்,நிறைந்தநல்வாவியும்
நாட்டநாளெலாம் மீன்கள் மிகக்கொட்டும்

காட்டும்கானத்தை மீன்இசைக்கு மங்கு,
ட்டுகூத்தெனில்நெஞ்சைநெகிழவைக்கும்
பட்ட வெளியெலாம்,வயல்நிலங்கள்!அங்கு
ட்டகரையெலாம் மரக்கலங்கள்!

ட்டுநகர்றாலும்,மனமுவந்த பால்தயிரும்,
ட பருப்பும்! கடாத தீக்குளிப்பும்,
டாமக்களுக்கு என்றும்புதுமையன்றோ
ட்டும்கடற்குளிப்பும் ஓங்குயர்சிறப்பன்றோ




தமிழகத்தில்கவிஞர்.வேலணைவேணியனுக்கு( கங்கைவேணியன் )தமிழகமீன்வளத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் அவர்களால்—அருட்கவி—எனும் பட்டமளித்து விருது வழங்குகையில் எடுத்தபடம்

கட்டுக்கடங்காத கடவுள்மேல் பற்றும்
மட்டுக்கடங்காத மண்மொழிப்பற்றும்
கட்டுக்குலையாத்தமிழ்பண்பும் மேவ,
மெட்டுக்குலையா கவிதரும் நன்னாடு!

முட்டிமோதிஇன்று இனங்கள்வெட்டுண்டு
பொட்டிழந்தும் மொட்டிழந்தும் புனிதமற
துட்டற்று துயரோங்க திருவெலாம் தேய
மட்டுநகர் மாமாங்கா!மனமிரங்காயோ நீ!
நாவற்குழி நாகேந்திரன்—லண்டன்

---

## ஈகை எண்ணமே பெரிது!

நாகையதன் கடல்பொங்கி மக்களெல்லாம்
நலிந்தக்கால்,ஈகையினை கண்டோம்:அன்பு
தோகையரும் வாரிவாரி தந்தார் அந்த
தொடர்பணியில் ஈகையினை போற்றுவமே

வள்ளுவன்தான் ஈகைக்கு,வித்து என்றால்
வற்றாமல் நீர்வளர்த்தார் வள்ளல்பல்லோர்
உள்ளுவதில் உயர்வுள்ளம் பழகிவிட்டால்
ஒவ்வொருவருள்ளமுமே கொடைவிடாமே

எள்ளளவு உதவியெனில்கூட நெஞ்சின்
எண்ணம்தான் பெரிதாகும்!அளவிலில்லை
வெள்ளத்தின் அனைய மலர்நீட்டம்போல்
வரையாது வழங்குனரே கலசம்போல்வார்

நம்மாலே இயன்றதனை இல்லாதார்க்கு
நாட்டமுடன் நல்குவதே ஈகையாகும்
அம்புவியில் ஈகையினை போற்றுதற்கே
அனைவரும் முனைந்திடுவோமின்றே!
கவிச்சுடர்.சு.இலக்குமணசுவாமி

---

## முடிவிலும் ஓர்ஆரம்பம்!

பசுமையான பள்ளிப்பருவத்தில்,
என்பாதங்களுக்கு கீழே,
பரவிக்கிடந்தது பூக்கள் மட்டுமே!
ஆனால் வாழ்க்கை எனும்
பயணத்தில் கால்வைத்தால்
மொய்த்துவருபவை எல்லாம் முட்களே!
எனினும் காயத்தால்கசிந்தொழுகும்
இரத்தத்தை பொறுமையுடன்துடைத்து
எறிந்து வந்தேன்,சிலகாலம்!
அந்தக்கனல்கொண்ட ஆண்டுகள்முழுதும்,
அக்கினிப்போர்வையில் எரிந்துஎஞ்சியவை
உருவத்தின் நிழலே!உனக்குமேலே
பருந்துகள் எப்போதும் பறந்ததால்
நீ கூட இன்னமும் செத்துவிடவில்லை
என்பது நிருபணமாயிற்று!
என்னை தடவி தாலாட்டவந்ததெல்லாம்
வடக்கே வரும் தென்றலல்ல!
மேற்கேவரும் மரணஒப்பாரிகளே.
அந்த ரணத்தோடு வாசித்த ராகமெலாம்
இன்று ஞாபகமெழுகுவர்த்தியின்
கண்ணீரில்நின்று,மெல்லநசிங்கி நழுவுது!
இந்த ஜோதிநிலவின் மேல்
விழுந்தஅரிவாள் வெட்டெல்லாம்
பாறைகள்மேல் முட்டிமிளிர்ந்தமின்வெட்டு
போல,கூர்மழுங்கியும் ஒளிகொடுத்த
ஓர் நிலவாகஇருந்தது உண்மையே!
வன்னியூர் வளர்மதி----கனடா

---

## முதல் எதிரி யார் தெரியுமோ?

ஒவ்வொரு நிமிடமும் ஏங்கும் மனிதா!
மகிழ்வுடன்வாழ எதுஇலை உன்னிடம்?
எண்ணிப்பார்!மனம்இல்லை!குணமில்லை!
மற்றவர்க்குதவும் மாண்பு,அறவேஇல்லை!
மறக்கும்,மன்னிக்கும் பண்புகூட,இல்லை!
மற்றெல்லாமுண்டு!நிறையவே வாழ்வினில்
என்ன இருந்தும்,எது கிடைத்தும்
அன்பும்பண்பும் இல்லாத வாழ்க்கையில்
ஆனந்தவாழ்வு எங்கே சாத்தியம்?
கோடிகோடியாய் பணத்தைக்குவிக்கலாம்!
குபேரமனதினில் ஈகைக்குணமில்லையேல்
அதுவே உன் வறுமைநிலை!
பிறர்துன்பம் கண்டும் வாழாவிருக்கும்
பிணியுள்ளமோ?உன் லோபித்தனம்!
நெகிழ்ச்சி அடை!மகிழ்ச்சிபெறலாம்!
மனதிற்கெதிராய் மந்தரித்தெழு!
அதுவே உன்முதல் எதிரி!
உட்பகை வெல்!மெய்ப்பொருள் காண்!
இன்றேஅதனைசெய்!நன்றேவாழ்வையமை
அன்புஉலகென்றுணர்!இன்புற்றதனை நுகர்
ஆரையம்பதி க.சபாரத்தினம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்